ஐப்பசி 1988



இன்று எம்பிரதேசங்களில் மக்களது கவலைக்கும், பயத்திற்கும், அமைதியின்மைக்கும், பிளவுக்கும், பலிக்கும், பழிவாங்கலுக்கும், போருக்கும் முக்கிய காரணம் எம் இளைஞர்களிடையே காணப்படும் வேறுபாட்டுணர்ச்சியேயாகும்.

பக்கம். 18

கம்பராமாயணத்தை ஒப்பியல் உணர்வுடன் விஞ்ஞான முறையில் நின்று அணுகி விமர்சிக்க வ. வே. சு. ஐயர் முயன்றமை பாராட்டப்படல் வேண்டும்.

பக். 9

இராமன் ஏறக்குறைய கிறிஸ்துவுக்குப் பின் முதல் நூற்றுண்டில்தான் அவதார புருஷன் என்ற அந்தஸ்துப் பெறுகிறுன்!

பக். 12

"சொறி மிஸ்!... என்னுலே முடியாது... கேள்ஸைக் கூட்டிக்கொண்டு அவைக்குப் பின்னுலை திரிய எனக்கு நேரமில்லே. எனக்குப் படிக்க நிறைய இருக்கு"

பக். 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஐப்பசி - 1988
மலர்: 20 இதழ்: 09

ஆசிரியர் :
பி. ஜோசப்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
எஸ். லோகநாதன்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்.

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

## உள்ளே...

1. உங்களோடு கொஞ்சம் ... 1
2. கவி ஆரம் ... 2
3. கிறிஸ்தவர்கள் வளர்த்த 4
4. சிறுகதை ... 5
5. இலக்கிய அதிர்வுகள் ... 8
6. இளைஞர் அரங்கம் ... 9
7. தமிழின் விமர்சனக்கலை 13
8. மாணவர் பக்கம் ... 16
9. தொடர் கதை ... 18
10. மரியாள் ஆண்டு 21
11. நற்செய்திப் பணியில் ... 23
12. இராமாயணம் பாடிய ... 26
13. விவிலியப் புதிர் ... 27

**எழுதுங்கள் !**

கிறிஸ்தவ - சமூகச் சிந்தனைகளைக் கொண்ட ஆக்கங்களைத் தொண்டன் எதிர்பார்க்கின்றான்,

புதிய சிந்தனைகளுக்கு - புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறான்.

எழுதுங்கள் ! ஏற்றவையாயின் பிரசுரிப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு கொஞ்சம்....

இலக்கியத்தைப் படைப்பதும் ஒரு கலை. அந்த இலக்கியத்தை விமர்சிப்பதும் ஒரு கலை தான். விமர்சனம் இன்று வளர்ச்சியடைந்துவரும் ஒரு கலை.

அது சினிமா விமர்சனம், நாடக விமர்சனம், பத்திரிகை விமர்சனம், இலக்கிய விமர்சனம் என்று விரிவடைந்து செல்கின்றது.

இலக்கிய விமர்சனத்தைப் பொறுத்தவரையில் ஏனைய மொழிகளில் உள்ள வளர்ச்சி, தமிழ் இலக்கிய உலகில் குறைவாகவே உள்ளது என்றே கூறவேண்டும். ஆயினும் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ளது என்றால் மிகையாகாது.

ஒருவர் ஏற்றுக்கொண்ட முயற்சியில் எந்தளவு வெற்றி பெறுகின்றார் அல்லது தவறி இருக்கின்றார் என்று சுட்டிக்காட்டுவதே விமர்சனத்தின் நோக்கமாகும். சுருங்கக் கூறின் ஒரு முயற்சியின் மதிப்பை எடைபோடுதல் விமர்சனம்.

பாராட்ட வேண்டியதைப் பாராட்டவும் வேண்டும். குறைகள் இருந்தால் சுட்டிக் காட்டவும் வேண்டும். வானளாவப் புகழவும் கூடாது. நிர்ணயமற்றுத் தாக்குவதும் கூடாது. விமர்சிக்கும் பொழுது தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி வைத்து விடவேண்டும். விமர்சனக்கலை வளர்ச்சியடைய முட்டுக்கட்டையாய் இருப்பது யாதெனில் விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் எம்மவரிடையே உருவாகாமையே யாகும்.

''ஆஹா, ஓஹோ'' என்று புகழ்ந்தால் மட்டும் வரவேற்கும் மனப்பான்மை, குறைகளைச் சுட்டிக்காட்டும் பொழுதும் இருக்கவேண்டும். விமர்சனத்துக்குப் பயந்து ஒதுங்கும் நிலை, விமர்சனத்தைப் புறக்கணிக்கும் நிலை மாறவேண்டும். விமர்சனக் கலை வளர்ச்சியடைய பல விமர்சகர்கள் எம்மத்தியில் அரும்பவேண்டும். ''நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்று சுட்டிக்காட்டக்கூடிய பல நக்கீரர்கள் உருவானால்தான் விமர்சனக்கலை வளர்ச்சியடையும். தமிழ் இலக்கிய உலகிலே விமர்சனக் கலையையும் வளர்க்கும் பரந்த நோக்குடன் தொண்டன் பணிசெய்யக் காத்துக்கிடக்கின்றான். நீங்களும் கொஞ்சம் ஒத்துழையுங்களேன்.

பி. ஜோசப்

---




நற்செய்தி அறிவிப்பு நம் மீட்பராகிய கடவுளின் கட்டளைப்படி என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தீத்து 1/4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் - இலக்கியம் - சூழல் !!

- சாருமதி -

இதயங்களைக் கிழிக்கிறார்கள்
சுய இருப்பு உள்ளவனைச்
சுரண்டிப் பார்த்து
இதோ ! எங்கள் பிரபல்யத்தேர்
இதில் ஏறு என்கிறார்கள்
கடிவாளம் இல்லாக் குதிரை வண்டி
எனக் கெதற்கு
என நான் கேட்டால்
ஒதுங்கிப் போ
ஒருவரும் உன்னை
அறியாமல் செய்கிறோம் என்கிறார்கள்
உரத்து நான் பேசினால்
உள்ளவர்களைத் திரட்டி
நீ ஒருவனே என்கிறார்கள்
நிகில் எனக்கில்லை
ஆனாலும் நான் மனிதன்
திகைத்து விடுகிறேன்
சில சமயங்களில்
சமரசம் செய்தால் என்ன என்ற
சஞ்சலமும் வருகின்றது
ஆனாலும்
சில முகங்கள் என்னைத்
திடமாக இரு என்கிறது
நல்லதோர் வீணை என நான் என்னை
சொல்லத் துணிய வில்லை
என்றாலும்
புழுதியில் கிடப்பதற்கு
நானென்ன புழுவா ?
இதயம் நோகுகின்றது
இல்லாததை நான் சொன்னவனல்ல.

கவி ஆரம்

## ஆடவர் பற்றும் நாளெதுவோ..?

காட்டில் எறிக்கும் வெண்ணிலவாய்
கடலில் பொழியும் பெருமழையாய்
ஏட்டில் எழுதாப் பெருங்கதையாய்
ஏழை காணாப் பெருநிதியாய்
நாட்டில் இங்கே பலபெண்மை
நலிவுற் றேதான் தேய்கிறது
வீட்டில் இருந்து விடு மூச்சு
வாசற் கதவைத் தீய்க்கிறது !

ஆளுந் துணையை எதிர்பார்த்து
அடங்கிக் கிடக்கும் பெண்மையினை
நாளும் பொழுதும் கரைக்கிறது
நரையுந் திரையுஞ் சேர்கிறது
கோளுந் தனமும் குடிகெடுக்கும்
குமரர்கள் முதுமை தானாகும்
அழுகை ஒன்றே துணையாகும்
ஆள்வோ ரின்றி மலர்வீழும் !

எத்தனை பூவை இவ்வுலகில்
ஏக்க மூச்சில் தீய்கிறது
இத்தரை வாழுங் காளையரின்
இதயம் ஏனோ காய்கிறது
பத்தரை மாற்றுப் பசும்பொன்னும்
பங்களாக் காருடன் பைங்கொடியை(ச்)
சொத்துடனே தான் மதிக்கிறது
சுந்தரப் பெண்மையை மிதிக்கிறது !

## அமைதிப் புறு...

விண்முட்டப் பறந்த
வெண்புறு இன்று
மண்பட்டுக் கிடக்குது
துடி துடித்து

குண்டுகள் கடந்து
பறந்தது இன்று
குண்டடி பட்டது
சடசடத்து.

நற்சீதமிசைத்துப்
பறந்தது இன்று
குருதியில் கிடக்குது
படபடத்து.

எப்போது மீளப்
பறக்கும் என்று
இந்நாடு கேட்குது
வெடவெடத்து.

ஆழியோன் ★

## நீயே இறைவனின் ஆலயம்

★ நிலாதமிழின்தாசன்

கருவறை தொடங்கி கல்லறை வரைக்கும்
கடவுளைத் தேடும் மானிடன்
திருவுடன் பொலியும் தேவனின் வடிவை
தெரிந்துணர்ந்தானோ பூமியில்
உருவினில் அவனே உண்மையின் வடிவம்
ஒளி இருள் யாவும் கலந்தவன்
மருவிடு வானவன்; மாண்பினர் தூய
மனமே இறைவனின் ஆலயம்.

ஏழையர் செல்வர் இருப்பவர் ஈவோர்
எல்லோருக்கும் பொது அவன்
"வாழையைப் போலே வாழ்வினையீந்து
வான்மக னருளினன் மீட்பினை"
தாழையின் மலராய்! தனி மணம் கமழும்
தண்ணொளிர் தூய நெஞ்சனே!
நீள்துயர் வாழ்விலும் நிமலனைத் துதிக்கின்!
நீயே இறைவனின் ஆலயம்

பொய்மையை நீக்கி மெய்மையை ஏற்று
பொலிவுடன் வாழ்வது நீயெனில்
செய்கையில் தூய்மை சீரிய நேர்மை
தெளிவுடன் கொண்டவன் நீயெனில்
வைதுனைத் துரத்தும் வஞ்சகர் தமையும்
வாழ்த்திடும் உளத்தோன் நீயெனில்
வையகம் தன்னில்! சத்திய(ம்) இறைவன்
வாழ்ந்திட நீயே ஆலயம்

சீதன மின்றிப் பல பெண்மை
சீரழிந் திங்கே கெடுகிறது
ஆதனம் கொடுத்தும் அடிமையென
அரிவையர் நிலையோ ஆகிறது
வேதனைக் கடலில் அலைமோதும்
வனிதையர் நல்மனந் தானென்றே
ஆதன மென்று தான்நினைத்து
ஆடவர் பற்றும் நாளெதுவோ...?

- சிவா. பத்மநாதன்

உன்னிலே போன்று அந்நியர் தமையும்
ஒப்புர வொழுகும் மனத்தனே
நன்மையே தினமும் நாடியே புரியும்
நல்லருள் ஞான வுளத்தனே
மின்னியே மறையும் மின்னலைப் போன்றது
மேதினி வாழ்வென நினைத்துமே
நின்மலன் மாதம் கதியென வாழும்
நீயே இறைவனின் ஆலயம்.

தாயினை மதித்து தந்தையைத் துதித்து
தாட் பணிந் தொழுகும் நேயனே!
தாயினும் மேலாய் நன்றியைப் பேணி
நல்லறம் காக்கும் மனிதனே
ஆயனும் எங்கள் அருமிறை யேசு
அருள்வழி ஒழுகும் புனிதனே
நேயமாய் இறைவன் நித்தியம் வாழ
நீயே; அவனது ஆலயம்.

# கிறிஸ்தவர்கள் வளர்த்த அகராதிக் கலை

மேனாட்டு கிறிஸ்தவ அறிஞர்கள் வழங்கிய செல்வங்களுள் ஒன்று அகராதிக்கலை.

மேனாட்டு முறையில் அகராதி தொகுத்துத் தமிழ் மொழி கற்போருக்கு புதியதோர் வாயில் அமைப்பது அவர்களுக்கு எளிதாக இருந்தது. கல்வி பெறாத மக்களுடன் பழகிய பாதிரிமார்களுக்கு இது மேலும் தேவைப்பட்டது. இக்காரணத்தினால் வழக்குச் சொற்களுக்கும் பொருள் விளக்கம் எழுத எண்ணினர். இவ்வாறு உருவாகியது அகராதிக்கலை.

இரண்டாயிரத்தி ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் அசீரிய மக்கள் அகராதி இயற்றிய செய்தியை வரலாற்றில் காண்கிறோம்.

சொற்பொருள் உணர்த்தும் அகராதி முறையைத் தமிழ் நூலாகிய தொல்காப்பியம் உயிரியலில் தெளிவாகக் காணமுடிகிறது.

1612ம் ஆண்டு முதன் முதலில் இத்தாலி மொழியில் அகராதி இயற்றப்பட்டது. கிரேக்கரும், உரோமரும், இந்தியாவில் வடமொழியாளரும், கடின அல்லது அரிய சொற்களுக்கு மட்டும் பொருள் விளக்கம் எழுதி வைத்தனர். இந்த அடிப்படையில் எழுதப்பட்டவைகளே நிகண்டுகளாகும். நிகண்டு என்றால் தொகுதி என்பது பொருள். எனவே நூலின் அமைப்பே தொகுதி தொகுதியாக அமைந்திருந்தது. பொருள் தெரிந்து கொள்வது சிரமமாக இருந்தது. இத்தகைய கடின முறையை மாற்றி சொற்களைத் தமிழ் நெடுங்கணக்கின் வரிசையில் தொகுத்து எவரும் எளிதில் சொற்பொருளை உணர்ந்து கொள்ளும் வகையில் அமைத்தவர்கள் மேல்நாட்டுக் கிறிஸ்தவ அறிஞராவர்.

1679ம் ஆண்டு பிரொயென்சா பாதிரியாரால் முதன்முதலில் எழுதப்பட்ட தமிழ்-போர்ச்சுக்கீச அகராதி இன்று நமக்குக் கிடைக்கவில்லை. எனவே 1732ம் ஆண்டு வெளிவந்த சதுரகராதிதான் முதல் அகராதி நூலாக போற்றப்படுகிறது. சதுரகராதியினை ஆக்கியோன் வீரமாமுனிவர். இவர் தமிழ் அகராதியின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

சதுரகராதி நான்குவகை அகராதியினை உள்ளடக்கிய அமைப்பு முறை கொண்டதாகும். பெயரகராதி, பொருளகராதி, தொகை அகராதி, தொடை அகராதி என்ற நான்கு பிரிவுகளுடன் விளங்குவது சதுரகராதி.

ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னரும் பல வழக்குச் சொற்களும், தொடர்களும் இணைக்கப்பட்டு பொருள் விளக்கத்துடன் சிறப்பான முறையில் 1779ம் ஆண்டு அறிஞர் பெப்ரீஷியஸ் அகராதி வெளியிட்டார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ் மொழியின் எல்லாச் சொற்களையும் அடக்க முயன்ற முதல் அகராதி 1842ம் ஆண்டு ஸ்பால்டிவ் பாதிரியார் வெளியிட்ட யாழ்ப்பாணம் தமிழ் அகராதியாகும். யாழ்ப்பாணம் நைட் பாதிரியார், பெர்சிவல் பாதிரியார், அறிஞர் திஸ்ரா என்பவர்களின் துணையுடன் மும்மடி அகராதி உருவாக்க முனைந்தனர். தமிழ் அகராதி, தமிழ் ஆங்கில அகராதி, ஆங்கிலம் தமிழ் அகராதியும் இதற்குச் சான்றுகளாகும்.

1862ம் ஆண்டு டாக்டர் வின்ஸ்லோ வெளியிட்ட தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி 67,000க்கும் மேற்பட்ட சொற்களையும், வழக்குச் சொற்களையும் அவற்றின் பொருள் விளக்கங்களையும் கொண்டு அகராதிக் கலைக்கு மேலும் மெருகூட்டியது.

ஆர். பி. குரி பாதிரியார் 1867ம் ஆண்டு நாகபட்டினத்திலிருந்து வெளியிட்ட தமிழ் லத்தின் அகராதியும், 1897ம் ஆண்டு வெளிவந்த தரங்கம்பாடி அகராதியும் இருமொழி அகராதி வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

யாழ்ப்பாணம் சந்திரசேகர பண்டிதர் முதல் வேங்கடாசலம்பிள்ளை போன்ற தமிழறிஞர் பலரும் அகராதி அமைப்பிற்கும், திருத்தத்திற்கும் உறுதுணை புரிந்த போதிலும் அகராதிக் கலையின் தோற்றத்திற்கும் ஏற்றத்திற்கும் வழிகாட்டிகளாக அமைந்தவர்கள் மேலைநாட்டுக் கிறிஸ்தவ அறிஞர்களாவர்.

- டாக்டர் கிறேஸ் செல்வராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பாவத்துக்குத் தண்டனை

- அநுராதா பாக்கியராஜா -

''ப்ளீஸ் ஐசே கெற் அவுட், ஐ காண்ட் கெல்ப் யூ... ப்ளீஸ் ப்ளீஸ் ஐசே கோ அவுட்''... இரவு நேரத்து அமைதியையும் கீறிக்கிழித்துக்கொண்டு காற்றோடு கலந்துவந்து என் காதிலும் மோதிக்கொண்டது அந்தக் குரல்.

என்வீட்டு மாடிப்படியில் திறந்திருந்த ஜன்னல் ஓரமாகச் சென்று திரைச்சீலையை விலத்திவிட்டுக் குரல் வந்த திசையை நோக்கி என் பார்வையைச் செலுத்துகிறேன் நான். ஓ! மைகோட் ஸ்ரீபன் டாக்டர் ஸ்ரீபன் ஆமாம் சந்தேகமேயில்லை ஸ்ரீபன் தான். கலைந்த தலையோடும் சிவந்த கண்களோடும் இதென்ன கோலம்? அவன் அருகே யாரோ ஓர் இளம் பெண்ணும் இளைஞனும் நிற்கிறார்கள்! சரிதான் இப்போது எனக்கு எல்லாமே புரிந்துவிட்டது.. நான் மௌனமாகத் திரும்பிவந்து என் படுக்கையில் சாய்ந்து கொள்கின்றேன். இப்போது என்னுடைய நினைவுகள் எல்லாம் டாக்டர் ஸ்ரீபனுடனான எனது பழைய காலத்தையும் நிகழ் காலத்தையும் நினைத்துப்பார்க்கத் தொடங்கியது.

டாக்டர் ஸ்ரீபனுக்கும் எனக்கும் நெடுநாட் சினேகம் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் நாங்கள் பல வருடகால நண்பர்களைப்போல் தான் பழகினோம். இருபத்தியாறே வயதான ஸ்ரீபன் புத்திச்சாதுரியமும், விவேகமும் படைத்த நல்ல ஒரு M.B.B.S. இளைஞன். நான் அவனிலும் இரண்டொரு வயசு முதிர்ந்த அப்போதிக்கரி... ஒரே ஆஸ்பத்திரியில் வேலை பார்க்க நேர்ந்ததால் இருவரும் நண்பர்களாகி விட்டோம்.

ஸ்ரீபன் எனக்கு உயிர் நண்பனாக இருந்தபோதும் அவனுடைய ஒருசில குணங்கள் எனக்குப் பிடிப்பதேயில்லை. ஆனாலும் அதற்காக அவனை நான் கோபித்தது கிடையாது. வேலை முடிந்தால் அந்த நாட்களில் மாலை 5 மணிக்கெல்லாம் இருவரும் காரில் புறப்பட்டு விடுவோம். எங்காவது சினிமாவுக்குப் போகலாம் என்பதுதான் எனது திட்டமாயிருக்கும். ஆனால் ஸ்ரீபனோ எங்காவதொரு 'பாருக்கு' முன்னால் காரை நிறுத்திவிட்டுச் சிரிப்பான். அப்புறம் என்பாடு திண்டாட்டம்தான். ''இனவ் ஸ்ரீபன் ப்ளீஸ் டோன்ட் ரேக் மைடியர் பிரென்ட்'' சொல்லியபடியே அவனைத் தடுத்து போத்தலை அப்பால் நகர்த்தி அவனை எழுப்புவதற்குள் என்பாடு போதுமென்றாகிவிடும்.

மறுநாள் காலை டியூட்டிரைம் இருவரும் ஒரே இடத்தில் வேலைபார்ப்போம் அப்போதெல்லாம் ஸ்ரீபன் மறந்தும் நிதானமிழக்கமாட்டான். O.P.D.யில் கியூவில் நிற்கும் மக்கள் கூட்டம் எல்லோரையும் பொறுமையாகப் பார்த்து அனுப்புவான். இடையில் வரும் இரண்டொரு வித்தியாசமான கேஸ்கள்... தன்னுடைய பேனாவால் நெற்றியைத் தட்டியபடியே அவன் கேள்விகேட்கும் பாவனை சிலசமயங்களில் நானே சுவாரஷ்யமாக என்னை மறந்து கேட்டுக்கொண்டிருப்பேன்.

எத்தனை மாசமா உங்களுக்கு வரல்ல?

பெண் தலையைக் குனிந்து பதில் சொல்லுவாள்.

ஓ! மூணுமாசம் பாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்ணிட்டுதா? ரூ லேட்டா கிட்டுதே. இப்ப கண்டிப்பாகச் செய்யணுமா?

கண்டிப்பாக ஆகணும் டாக்டர். ஆணும் பெண்ணும் ஒத்துப்பாடுவார்கள்.

ஓல்றைற் - இரண்டுபேரும் புருஷன் பெண்சாதிதானே? இப்போது ஸ்ரீபனின் கேள்வியைக்கேட்டு குற்றவாளிக் கூண்டில் நிற்கும் குற்றவாளியைப்போல் இருவரும் நடுங்கிப் போவார்கள்.

ஓ! ஐ சீ... அப்படியா விஷயம். சரி, சரி நாளைக்கு மாலை ஐந்து மணிக்கெல்லாம் 'தேவி கிளினிக்'கில ஜொயின் பண்ணிடுங்க. சிட்டை எழுதிக் கொடுத்தபடியே வந்தவர்களை அனுப்பிவைப்பான் அவன்.

நாளை மாலை ஆயிரமோ இரண்டாயிரமோ கொடுத்து அவர்கள் காரியத்தை வென்றெடுத்துப் போய்விடுவார்கள். மாசத்துக்குத் தகுந்தபடி அவனுக்குப் 'பீஸ்' கொடுத்தால் சரி. சும்மா சொல்லக்கூடாது. ஸ்ரீபன் கைராசிக்காரன். தொடங்கின வேலை எப்படியும் சக்ஸஸ் ஆகிவிடும். இப்படி நாளொன்றுக்கு அவனுக்கு எத்தனையோ கேஸ்கள் அமைந்துவிடும்.

என்னால் சில சமயங்களில் வேதனை தாங்க முடியாமல் போய்விடும் 'ஸ்ரீபன் இதெல்லாம் உயிர்க்கொலையடா. ப்ளீஸ் பாவம் செய்யாதடா. அதுவும் புதுசா இப்போது தான் கல்யாணம் பண்ணியிருக்கே இதெல்லாம் கூடாது ஸ்ரீபன். இந்த விஷயத்தில நாம கெல்ப் பண்றதால தாண்டா நாட்டில் ரொம்பப் பேர் தப்புத்தண்டா பண்ணிண்டேயிருக்கா. ப்ளீஸ் மச்சான் போனது போகட்டும் இதோட விட்டிடு. உன்னோடை சமயங்கூட இத ஒத்துக்கல்ல ஸ்ரீபன். அடியோட குழந்தை வேணும்ன்னு வந்தாங்கனா அவங்கட பொஸிஸனைப் பார்த்து ஆப்பரேஷன் பண்ணிடு. பட் இப்பிடி மூன்று நாலு மாசத்திலேயெல்லாம் பணத்துக்காகக் கைவைக்காதடா. அவனை நான் எத்தனையோ தடவைகள் கெஞ்சிக் கெஞ்சிப் பார்த்து அன்றைக்குக் கொஞ்சம் கடுமையாகவே பேசிவிட்டேன். இருவருக்குமிடையே நடந்த காரசாரமான வாக்குவாதத்தில் ஸ்ரீபன் என்னை நன்றாகப் பேசிவிட்டான். ''என் சொந்த விஷயத்தில நீ ஒன்றும் தலையிடாத சஞ்சீவசர்மா'' அவன் சீரியஸாகத்தான் என்னிடம் சொல்லிவிட்டான். அன்றோடு எங்கள் நட்பும் முடிந்து போனது.

காலம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. இப்போதெல்லாம் ஸ்ரீபனும் நானும் சிறுபுன்னகையுடன் நழுவிக்கொள்வோம். அந்தத் தொடர்மாடியில் என் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஸ்ரீபன் மனைவி சுகன்யாவுடன் குடியிருந்தான். என் வீட்டு யன்னலைத் திறந்தால் அவன் வீட்டுப் படுக்கை அறையைக் கூடப் பார்க்கலாம். அப்படியொரு அண்மை.

ஒரு தடவை சுகன்யாவுடன் ஸ்ரீபன் என்வீட்டுக்கு வந்திருந்தான். தன் மனைவியும் ஒரு இந்துப்பெண் என்று அவளை அறிமுகப்படுத்திவைத்தான். எனக்கு சந்தோஷமாயிருந்தது. ஸ்ரீபன் இனித் திருந்திவிடுவான் என்ற நம்பிக்கை உள்ளத்தில் வேரோடியது. ஆனாலும் ஆஸ்பத்திரியில் அவனுடைய நடவடிக்கைகளைக் கண்காணித்தபோது என் எண்ணமெல்லாம் பொய்யானது என்பதை நான் மெதுமெதுவாக உணரத்தொடங்கினேன்.

காலம் ஓடிக்கொண்டேயிருந்தது. இதற்கிடையில் சுகன்யாவுக்கு மூன்று தடவைகள் அபோஷன் ஆகிவிட்டதாகவும் இப்போது மீண்டும் தாய்மையடைந்திருப்பதாக

## பெண்கள் தோற்றார்கள்



இங்கிலாந்து நாட்டில் ஸ்ட்ரெட்போர்ட் நகரில் ராய்வில்கின்சன் என்ற 16 வயது இளைஞன் தன்னுடன் போட்டியிட்ட 4.075 பெண்களைச் சமையற்கலையில் தோற்கடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் ஸ்ரீபன் பேச்சுவாக்கில் ஒரு நாள் சொல்லிவைத்தான். இனி அவன் ஒரு குழந்தைக்குத் தகப்பனுகி விடுவான் என்று வாழ்த்தி அனுப்பினேன் நான்.

இது நடந்து இரண்டு மூன்று மாதம் ஓடியிருக்கும் அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை என் வீட்டுக் கதவில் தட்டிக்கொண்டு ஸ்ரீபன் என்னை அழைத்தான். வெளியே வந்து விஷயத்தைக் கேட்டபோது சுகன்யாவுக்கு நிலைமை மோசமாக இருப்பதாகவும் உதவிக்கு உடன்வரும்படியும் கெஞ்சினுன். நான் அவசரமாக ஆயத்தமானேன். அப்போதும் எனக்கொரு சந்தேகம். முன்னர் நடந்த 'அபோஷன்' இவன்தான் செய்தானே? யோசித்தபடியே... முன்னர் மூன்றுதடவையும் நீயாகச் செய்தாயா ஸ்ரீபன் கொஞ்சம் கோபத்துடன் தான் அவனைக் கேட்டேன். நோ...நோ... ப்ரமிஸ் என்னை நம்பு சஞ்சீவ்' அவனை நம்பினேன் நான்.

ஸ்ரீபனின் வீட்டில் சுகன்யா தும்பைப் பூவாகத் துவண்டுபோய் நினைவின்றிக் கிடந்தாள். போனவாக்கில் வேலைக்காரியின் துணையோடு அவளை அள்ளிப் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தோம். கடைசிநேரத்தில் V.O.G. ஆப்பரேஷனுக்கு முடிவெடுத்துவிட்டார்.

ஸ்ரீபனுக்கு சுகன்னியாவையிட்டு ஒரே கவலையாயிருந்தது. அவனே ஒரு திறமையான டாக்டராக இருந்தும் அவளையிட்டு அவன் பெரும் பீதியடைந்தான். பக்கத்தில் வந்து அவனை நிற்கும்படி டாக்டர் சொன்ன போதும் தானுகத் தன் றூமில் போய் அடைந்துகிடந்தான். ஒன்றரை மணிநேரம் ஆப்பரேஷன் முடிந்துவிட்டதாகப் போன்கோல் வந்ததும் அடித்துப் பிடித்துக்கொண்டு இருவரும் சென்றேம். அந்த ஸ்பெஸல் வார்டில் சுகன்யா அறிவு வராமலே கிடந்தாள். V. O. G. ஸ்ரீபனை அழைத்தார். ''இதைச் சொல்வதற்கு மிகவும் மன்னிக்கவேண்டும் ஸ்ரீபன். மிஸஸ் ஸ்ரீபன் பிழைத்துவிட்டார். குழந்தை உயிரோட இருந்தும் கைகால் வழங்காமல் இருக்கிறுன். கண்களைக்கூட உத்தரவாதம் பண்ண முடியாமல் உள்ளது. எதுவும் நம்கையில் இல்லை. கோட் பிளஸ் யூ'' துயரத்தோடு பெரிய டாக்டர் சொல்லிமுடிக்க முன்னமேயே ஓ! மைகோட்... நெஞ்சைப் பொத்தியபடியே கத்தத் தொடங்கியவன்தான். அந்த அழகான குழந்தை அசைவின்றி ஊனக்குழந்தையாகப் படுத்துக் கிடந்ததைப் பார்க்கும்போது என்னுலேயே வேதனையைத் தாங்க முடியவில்லை. ஸ்ரீபன் மட்டும் எப்படித் தாங்குவான்? என்ன செய்வது பாவத்துக்குத் தண்டனை... அனுபவிக்கத்தானே வேண்டும்... கெற்றவுட்... ப்ளீஸ் ஐசே... கெற்றவுட்... ஐகாண்ட் கெல்ப்யூ... கோ அவுட் அந்த வீட்டுக்கு யார் வந்தாலும் ஸ்ரீபன் இன்றுவரை இப்படிக் கத்திக்கொண்டேயிருக்கிறுன். □

## சிந்தனை முத்துக்கள்

ஆட்சிப் பொறுப்பு என்பது பயிற்சிபெற விரும்புகிறவர்களுக்குரிய ஓர் இடம் அல்ல. பயிற்சி பெற்றவர்கள் இருந்து பணியாற்ற வேண்டிய களம் அது. இதைப் புரிந்து கொள்ளாமல் அல்லது நாட்டு மக்களுக்கு இது தெரியாது என்பதால் யாரும் ஆட்சிக் களத்தையே பயிற்சிக் களமாக்குதல் கூடாது.

தங்களைப் பற்றிச் சிந்திக்கும்போதே தங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களைப் பற்றியும் சிந்திப்பவர்களே மானுட வாழ்வில் தங்களுக்குரிய எல்லைகளை சரிவரப் புரிந்து கொள்கின்றனர். அவர்களின் வாழ்க்கையே அவர்களுக்கும் பிறருக்கும் இன்பம் தரும் வர்ழ்வாக அமைகிறது.

குழந்தைப் பருவம் கும்மாளமிட்டு விளையாடித் திரியவும் அதன் மூலம் உடலையும் உள்ளத்தையும் வளர்த்துக்கொள்ளவுமே அமைந்தது. உலகத்தைக் கண்டும் கேட்டும் அவ்வாறு கண்டு, கேட்டு அறிந்தவைகளை நினைத்தும் சிறுகச் சிறுகச் செழுமை அடைந்து தனக்கு என்று ஒரு வடிவம் கொள்ள முனைகிறது இளமை.

— மாஸ்டர் றூபஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய அதிர்வுகள்

## -நக்கீரன்-

★ அமரர் டானியலின் ''தண்ணீர்'' நாவல் அண்மையில் யாழ். பல்கலைக் கழக மண்டபத்தில் வெளியிடப்பட்டது. நிலப் பிரபுத்துவத்தின் எச்ச சொச்சங்களாக இன்னும் யாழ். மண்ணில் தலைவிரித்தாடும் சாதி ஒடுக்கு முறைகளுக்கெதிராக தமது எழுத்துக்களாலும், பேச்சுத் திறனாலும் மட்டுமல்ல நேரடிப் போராட்டங்களிலும் ஈடுபட்டு சிறை சென்றவர் அமரர் டானியல்.

அன்னாரின் பஞ்சமர்கோவிந்தன் போன்ற நாவல்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் சோக வரலாறுகளை யதார்த்த பூர்வமாக சித்தரிக்கிறது. யப்பானிய பல்கலைக் கழகம் கூட அன்னாரின் படைப்புகளை ஆராய்ந்து வருகிறது.

யாழ் பிரதேசத்தில் சில கிணறுகளில் தண்ணீர் அள்ளுவதற்குக் கூட ஒதுக்கப்பட்டவர்களை அனுமதிப்பதில்லை. இத்தகைய சில பிரச்சினைகளை பகைப்புலமாகக் கொண்டு பின்னப்பட்டதே ''தண்ணீர்'' நாவல்.

★ ''இதய ரஞ்சனி'' என்ற வானொலி நிகழ்ச்சியை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். வர்த்தக நிகழ்ச்சியாக அது இருந்தபோதிலும் இலக்கியத் தரம்மிக்கதாக அமைந்து பல மட்டத்தவர்களையும் வெகுவாகக் கவர்ந்திருந்தது. அந்த நிகழ்ச்சியில் 1983ம் ஆண்டு வரை ஒலிபரப்பாகிய சமூக பண்பாட்டுக் கோலங்களில் சில தொகுக்கப்பட்டு ''காந்தளகம்'' வெளியீடாக வந்திருக்கிறது.

வானொலி நேயர்களுக்கு நன்கு அறிமுகமான திருவாளர்கள் எஸ்.கே.பரராசசிங்கம், என். சண்முகலிங்கன் ஆகியோரே ''இதய ரஞ்சனி'' சமூக பண்பாட்டுக் கோலங்களின் மூலகர்த்தாக்கள். வானொலி நிகழ்ச்சிக்கான பிரதிகள் தமிழில் இவ்வாறு தொகுக்கப்பட்டு நூலாக வெளிவரும் சந்தர்ப்பங்கள் குறைவானவை. இந்த வகையில் குறித்த நூலின் மூலம் சமூக பண்பாட்டுக் கோலங்களைத் தரிசிக்க முடிவதோடு வானொலிக்கான பிரதிகளை எழுதுவோர்களுக்கு முன் உதாரணமாகவும் விளங்குகிறது.

★ மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல்வேறு இலக்கிய கர்த்தாக்கள் சிதறியிருப்பது ஒரு புறம்; இன்னொரு புறத்தில் பலர் இலை மறை காய்களாகவும் இருக்கிறார்கள். இதனால் நாட்டின் ஏனைய சில பிரதேசங்களில் காணப்படுவதுபோல ''இலக்கிய அமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தை பலரும் உணர்ந்த போதிலும் செயலுருவம் பெறவில்லை.

இவ்வருட இறுதியில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் கல்விமான்கள், வாசகர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து மட்டக்களப்பு கல்வி, கலை, இலக்கிய பேரவை என்ற அமைப்பு உருவாக இருப்பதாக அறிகின்றோம்.

இது வெறும் செய்தியாக அமையாது செயலுருப்பெறுமென்றே நாமும் எதிர்பார்க்கிறோம்.

★ அன்புமணி நாடறிந்த (மட்டக்களப்பு பிரதேச) எழுத்தாளர், பழகுதற்கு இனியவர், மறைகரமாக பல இலக்கிய முயற்சிகளுக்கு தோள்கொடுத்து வருபவர். மலர் வெளியீடாக ஓரிரு நாவல்களைக் கூட வெளியிட்டவர்.

இருந்தபோதிலும் அவரின் படைப்புக்கள் எதுவும் இதுவரை நூலுருப் பெறவில்லை. தன்னைவிட மற்றவர்களை நேசிக்கும் மனோபாவமே இதற்குக் காரணம். உதயம் வெளியீடு தமது மூன்றாவது படைப்பாக 'அன்புமணி' யின் சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதாக அறிகின்றோம். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளைஞர் அரங்கம்

# வேறுபாட்டுணர்ச்சி...

பாகிஸ்தான் ஜனாதிபதி கடந்த ஆவணித் திங்கள் 17ஆம் நாள் இறந்த பின்னர் பல அபிப்பிராயங்கள் உலக நாடுகளிலிருந்து எழுந்தன. அதேவேளை அந் நாட்டின் பிரதான எதிர்க்கட்சித் தலைவி கூறிய வார்த்தை மிக முக்கியமானதாகும்.

"நாட்டை மூடியிருந்த பாரிய இருள் ஒன்று நீங்கி விட்டது." என்பதே அன்னாரின் கூற்றாகும்.

இவ்வாறு கூறுவதற்கு அன்னாரிடம் அமைந்திருந்தது என்ன? வேறுபாட்டுணர்ச்சியேயாகும்.

- ☐ கொள்கை அடிப்படையில்
- ☐ ஆட்சி அடிப்படையில்
- ☐ ஆளுமை அடிப்படையில்
- ☐ உடமை அடிப்படையில்
- ☐ இன, மத அடிப்படையில்

இவ்வாறு மக்களிடையே, பல் வேறுபட்ட குழுக்களிடையே வேறு பாட்டுணர்ச்சிகள் அமைந்திருப்பதனாலேயே;

- இரக்கமற்ற ஆள் கடத்தல்கள்
- கொடூரமான-கசாப்பு கடைக் கொலைகள்
- மிகையான பண-நகைக் கொள்ளைகள்

பரவலாக இடம் பெறுகின்றன. இவற்றைச் செய்வோர் - எதிர் அணியினரின் குறைபாடுகளை முன்வைத்து - நேரடியாகவும் தமது எழுத்துக்கள் - சுவரொட்டிகள் மூலமும் நியாயப்படுத்தியும் வருவது வேதனைக்குரியதாகும். வேறுபாட்டுணர்ச்சி வளர்ந்து விட்ட நிலையில்தான் ஒருவன் (ஒரு குழு) தமது வயதினரை, இனத்தவரை அந்நியராக, விரோதியாகக் கணிப்பான். எப்போதும் குறைகண்டு பிடிப்பான், காட்டியும் கொடுப்பான்.

இன்று எம் பிரதேசங்களில் மக்களது கவலைகளுக்கும், பயத்திற்கும், அமைதியின்மைக்கும், பிளவுக்கும், பகைக்கும், பழிவாங்கலுக்கும், போருக்கும் முக்கிய காரணம் எம் இளைஞர்களிடையே காணப்படும் வேறுபாட்டுணர்ச்சியேயாகும்.

ஒரு (சாராருக்கு)-நாட்டிற்கு இவை அரசியல், பொருளாதார வாழ்க்கையாகவும் எமக்கு இவை நிம்மதியற்ற, உளப்புண்கள் நிறைந்த அச்சமுள்ள வாழ்க்கை என்பதையும் எப்போது எமது இளைஞர்கள் உணருவார்களோ, அப்போதே எம் மக்கள், நிலைப்பார்கள், நியாயமான வாழ்க்கையை நடாத்துவார்கள். இவற்றை அனைத்து அன்பர்களும், நண்பர்களும் சிந்தனை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கும் இதையிட்டு அவர்களது வழிமுறைகளுக்கு அமைவாகக் கூற வேண்டும், என அன்புக் குரல் கொடுப்பது —

- கலையுலகன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★★★ உளநோய்கள் ★★★

இன்று உலகெங்கும் எல்லா வயதினரிடையேயும், சகல இனத்தினரிடையேயும் உளநோய்கள் மிக வேகமாகப் பரவி வருகின்றன. உளநோய்களின் செயற்பாடுகள் பயங்கரமானவைகளாகவும், கொடூரமான வைகளாகவும், அநாகரீகமான வைகளாகவும் அமைகின்றன. இன்று எல்லாச் சமூகங்கள் மத்தியிலும் உளநோய்களின் வெளிப்பாடுகளையே நாம் அன்றாடம் அவதானிக்கின்றோம்.

ஒருவனது நடத்தை தமக்கும், தம்மைச் சூழவுள்ளவர்களுக்கும் இடையூறுகளையும், ஆபத்துக்களையும் விளைப்பனவாக இருப்பதையே உளநோய்களின் வெளிப்பாடுகள் எனக் கொள்கின்றோம். இத்தகைய உளநோயாளர்கள் தனிமைப்படுத்தப்படுவதுண்டு. பொதுவாக மனமருத்துவ (Mental Hospitals) நிலையங்களிலும், சிறைச்சாலைகளிலும் (Prisons) அதிகளவு தனிமைப்படுத்தப் படுபவர் இன்று இவர்களில் அநேகம் பேர் சமூகங்களின் மத்தியில் நடமாடுவதுதான் பெரும் அழிவுகளுக்கும், பிறழ்வான நடவடிக்கைகளுக்கும் காரணமாக அமைகின்றன.

உளநோய்களை (Mental discases) பொதுவாக இருவகைப்படுத்தலாம்.

1. செயலறிவு உளநோய்கள் (Funetronal Psychosis)
2. உடற்சார்பு உளநோய்கள் (Organic Psychosis)

பிரதான நரம்பு மண்டலத்தில் நோய்கள் இல்லாமலேயே ஒருவனிடம் பிறழ்வான நடவடிக்கைகள் அமைந்திருக்குமாயின் அது செயலறிவு உளநோய் எனப்படும். நரம்பு மண்டலத்தில் குறிப்பாக மூளை பாதிக்கப்பட்டு நடத்தைப் பிறழ்வுகள் காணப்பட்டால் அது உடற்சார்பு உளநோய் என்போம்.

இன்று எம்மத்தியில் உள்ளவர்களிடம், குறிப்பாக அதிக இளைஞர்களிடம் காணப்படுவது செயலறிவு உளநோய்களாகும். இவையே பயங்கரமான செயற்பாடுகளுக்கும் வழிவகுக்கின்றன.

இச் செயலறிவு உளநோய்களையும் மேலும் மூவகைப் படுத்தலாம்.

(அ) வெறிச்சோர்வு உளநோய் (Manicdepressive psychosis)

(ஆ) பேரனுயா (Paranoia)

(இ) பித்து நோய் (Schizophrenia)

வெறிச்சோர்வு உளநோய் உடையவர்களே, வெறி பிடித்த நாய்களைப்போல் அநாகரீகச் செயல்களில் ஈடுபடுபவர். ஆரம்ப நிலையில் உரத்துச் சத்தமிட்டுப் பேசுதல், கும்மாளமடித்தல், கூத்தாடுதல் போன்றவற்றில் ஈடுபட்டு, உச்ச நிலையில் பொருட்களை - மக்களை அழிக்க முற்படுவார்கள். சில வேளைகளில் ஆட்களைக் கடிப்பார்கள். இவர்களை உடனடியாகத் தனி அறைகளில் பூட்டி வைத்தல் வேண்டும். ஆனால் இன்று இத்

## ★ பயணி

போலந்து யூத ஞானி ஷாயிமைப் பார்ப்பதற்காக ஒரு சுற்றுலாப் பயணி அவருடைய இல்லம் சென்றார். ஷாயிமின் இல்லம் துடைத்து வைதாற்போல் மிக சுத்தமாக இருந்தது, மேசை, நாற்காலி, பாத்திரங்கள் எதுவும் இல்லை. வியப்படைந்த சுற்றுலாப் பயணி ஞானியைப் பார்த்து ஐயா! உங்கள் பொருட்கள் எல்லாம் எங்கே?... என்று ஆச்சரியத்துடன் கேட்டார். ஷாயிம் சிரித்துக் கொண்டே சுற்றுலாப் பயணியைக் கேட்டார்;-

"உங்கள் பொருட்கள் எல்லாம் எங்கே?

"ஆனால் ஐயா! நான் சுற்றுலாப் பயணி பயணம் வந்தவன்."

ஷாயிம் ஒரு விஷமப் புன்னகையுடன்: "நானும் அப்படித்தான்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் 10 மிகப் பெரிய ஆயுத ஏற்றுமதி நாடுகள்

( 10 லட்சங்களில் )

| | |
|---|---|
| அமெரிக்கா ... | 24893 |
| ரஷ்யா ... | 15755 |
| பிரான்ஸ் ... | 6213 |
| இத்தாலி ... | 2273 |
| இங்கிலாந்து ... | 2141 |
| மேற்கு ஜெர்மனி ... | 1712 |
| நோர்வே ... | 724 |
| நெதர்லாந்து ... | 539 |
| பிரேசில் ... | 421 |
| இஸ்ரேல் ... | 367 |

தகைய உளநோயாளர்கள் அதிகமானோர் வெளியில் நடமாடுவதனால்தான் அழிவுகள். படுகொலைகள் இடம் பெறுகின்றன. ஒரு கட்டத்தில் இவர்களே தற்கொலை செய்து கொள்ளவும் முற்படுவர்.

பேரனுயா உளநோய் உள்ளவர்கள் தாங்கள் உயர்ந்தவர்கள் எனப் பொய் எண்ணம் (Ideas of grandeur) கொண்டு தாங்கள்தான் ஹிட்லர், இடிஅமீன் என்று எண்ணி அதன் படி நடக்க முற்படுவார்கள். மற்றவர்கள் தங்களை அழிக்கத் திட்டமிடுகிறார்கள் என்ற பொய் எண்ணங்களால் (Delusions of Persection) அவதியுற்று, மற்றவர்களை கொடுமைப்படுத்தியும், ஆக்கிரமிப்பு எண்ணத்தோடும் நடந்து கொள்கிறார்கள்.

பித்து நோயில் நான்கு வகை உண்டு. இவற்றில் மிகப் பயங்கரமானது ''கேட்டடோனிக்'' பித்து நோய் என்பதாகும். இவர்களது தசைகள் எப்போதும் விறைப்பாகவே இருக்கும். இன்னும் ஒரு பித்துநோயும் வியப்புக்குரியது ''ஹெபி மி ரெனிக்'' என்பதாகும். ஒரு மகன் தன் தாய் இறந்த செய்தியையும் சிரித்துக்கொண்டு சொல்லும் இயல்புகளை இவர்களிடம் அவதானிக்கலாம்.

உடற்சார்பு உளநோய் அதிகமாகப் பரம்பரையாக ஏற்படுகின்றது எனக் கூறப்படுகின்றது,

இவற்றிலும் மூவகை உண்டு —

(அ) முதிர்ச்சிப் பருவ இறுதி உளச் சோர்வு (Invalutional melaucholia)

(ஆ) முதியவர் உளநோய் (Senile psychosis)

(இ) மது விளைவு உளநோய் (Alcoholic psychosis)

ஒருவரின் ஒரு பருவம் முற்றுப் பெறும் போது ஏற்படுவது முதிர்ச்சிப் பருவ உளநோயாகும். உதாரணமாக ஒரு பெண் பெண்மையை இழக்கும்போது இது ஏற்படலாம். இந்நோயுள்ளவர்கள் மற்றவர்களை அதிகம் சந்தேகிப்பர். முதியவர் உளநோய்கள் அதிகமாக ஞாபக மறதி, தேவையற்ற விவாதம் ஆகிய இயல்களை வெளிக்காட்டும் மூளை நரம்பு கனத்துப் போவதால் இது ஏற்படுகிறது எனக் கூறப்படுகிறது.

மதுபானப் பழக்கம் அதிகம் உள்ளவர்களிடம் மதுவிளைவு உளநோய் உண்டு. இதனை நாம் பெரும்பாலும் அவதானிக்கின்றோம்.

இவற்றைவிட இன்று மேக நோய் (Syphilis) காரணமாக ஏற்படும் மூளைவாத உளநோயும் (General paresis) இன்று பரவி வருகின்றது. □

**தொகுப்பு : எஸ். லோகநாதன்**

---

★ பாரிசிலுள்ள நேத்ரே டாம் டி அட்வெல் என்ற கோயில் திருத்தந்தை 13ம் லியோவின் நினைவாக அமைக்கப்பட்டது. திருத்தந்தையர் அணியும் மூன்றடுக்கு மகுடத்தின் பெரிய உருவம்தான் அந்தக் கோபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் விமர்சனக்கலையின் முன்னோடி

# வ. வே. சு. ஐயர்

க. யோகநாதன் B. A. (Hons.)

திரு. க. யோகநாதன் அவர்கள் ஒரு பட்டதாரி ஆசிரியர் - முற்போக்கு சிந்தனை கொண்ட எழுத்தாளர். கிழக்குப் பகுதியில் உயர் கல்வித்துறையில் அரும்பணியாற்றும் விபுலானந்தா அகெடமியில் பணிபுரிபவர். 'வயல்' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவர் 'சாருமதி' என்ற புனைபெயரில் சத்தான கட்டுரைகள் படைத்திருக்கிறார். கூர்மையான விமர்சகர். அண்மையில் வெளிவந்த இவரது விமர்சனம் ஒன்று கிழக்கின் இலக்கியக் களத்தில் மிகுந்த பரபரப்பை உருவாக்கியதை பலரும் அறிவர். உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு பயன்தரும் வகையிலும், இலக்கியப் பிரியர்களுக்கு இனிக்கும் விதத்திலும் தொண்டனில் தொடர்ந்து இலக்கியக் கட்டுரைகள் வரைய முன்வந்துள்ளார். அவருக்கு எம்முடைய வாழ்த்தும் நன்றியும்.

(இ - ஆ.)

தமிழில் நவீன திறனாய்வு வ. வே. சு. ஐயரில் இருந்தே ஆரம்பிக்கின்றது என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஓர் உண்மை ஆகின்றது.

வ. வே. சு. ஐயர் அவர்கள் பாரதி காலத்தவர், தமிழ் சிறுகதையின் முன்னோடியும் இவரே. பாரதியைப் போலவே ஐயர் அவர்களும் இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு இருந்தவர் ஆவார்.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் வ. வே. சு. ஐயர் பற்றிக் கூறும்பொழுது தமிழில் விமர்சனக் கலையை அதற்கே உரிய விளக்க உணர்வுடன் கையாண்ட மூலவர் எனக் கூறுவார்.

வ. வே. சு. ஐயர் தனது விமர்சனத் திறனை கம்பராமாயணம் பற்றிய ஆராய்ச்சியின் மூலம் வெளியிட்டார். "KAMBARAMAYANAM A STUDY" என்ற நூலை ஆங்கிலத்தில் இவர் எழுதினார். இந்நூலில் இவர் கம்பனையும் உலகின் பிறகாவிய கர்த்தாக்களையும் ஒப்பிட்டு கம்பனை சிறப்புடையவராய் நிறுவுகின்றார்.

ஹோமர், வெர்ஜில், மில்டன் போன்ற ஐரோப்பிய காவிய கர்த்தாக்களுடன் கம்பனை ஒப்பிட்டு கம்பனின் சிறப்புக்களை இவர் எடுத்துரைக்கின்றார். கம்பனின் சிறப்புக்களை நிறுவுவதோடு மட்டும் இன்றி இவர் தமது நூலில் வேறு சில விடயங்களையும் விபரிப்பதை நோக்கமாய்க் கொண்டுள்ளார்.

காவியம் பற்றி மேனாட்டில் விபரிக்கப்பட்ட விடயங்களைக் கூறுவதுடன் மேனாட்டுத் திறனாய்வாளரைத் தமிழ் நாட்டவருக்கு அறிமுகம் செய்வதும் வ.வே.சு. ஐயரின் நூலாக்க நோக்கமாய் காணப்படுகிறது.

இன்றைய இலக்கிய உலகின் அறிவுடன் கம்பராமாயணத்தைப் பற்றிய வ. வே. சு. ஐயரின் நூலை அணுகின் அவை சில குறைபாடுகளைக் கொண்டு இருப்பினும் கம்பராமாயணத்தை ஒப்பியல் உணர்வுடன் விஞ்ஞான முறையில் நின்று அணுகி விமர்சிக்க ஐயர் முயன்றமை பாராட்டப்படல் வேண்டும். வ. வே. சு. ஐயர் தீவிர தேசியவாதியாக வாழ்ந்தவர் என்ற வகையில் அவர் ஈடுபட்ட துறைகளில் அத்தேசியவாதம் முனைப்புக் கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது. இந்த வகையில் ஐயரின் விமர்சன முயற்சித் துறையையும் அத்தேசிய உணர்வு விட்டுவைக்கவில்லை என்றே கூறல் வேண்டும். இது வ. வே. சு. ஐயரிடம் மட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் காணப்பட்ட பண்பு அன்று. இவர் காலத்தில் வாழ்ந்த தேசியவாதிகள் பலரிடம் காணப்பட்ட ஒரு பொதுப் பண்பே ஆகும். பாரதி திரு. வி. க. போன்றவர்கள் இவ் வகையில் ஐயருடன் ஒப்புநோக்கத்தக்கவர்களே ஆவர்.

இந்திய தேசியவாதிகளிடம் காணப்பட்ட பிறிதொரு பிரதான குணும்சங்களில் ஒன்று தான் இந்திய பண்பாடு, கலாச்சாரம், மெஞ்ஞானம் ஆகியவை உலகிற்கே வழிகாட்டத் தக்கவை என்ற நம்பிக்கையாகும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பல பிரபல்ய தேசியவாதிகள் இக்கருத்தை பல சந்தர்ப்பங்களில் வெளியிடவும் செய்தனர். திலகர், ராஜ்வாடே, ரானடே, ஐயங்வால், பண்டார்கண், பாஷெி, கேட்நற் கோஷால், மஜும்தார் போன்ற இந்தியத் தேசியவாதப் பிரமுகர்கள் இவ்வரிசையில் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழ் நாட்டவர்களான பாரதி, வ. உ. சிதம்பரஞர், திரு. வி. க. போன்ருேரும் மேற்படி வரிசைக்குள் வரத்தக்கவரே.

பாரதி தனது சுயசரிதையில் ஆங்கிலக் கல்வியை இகழ்ந்து கூறும் சந்தர்ப்பத்தில்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை"

எனப்பாடுவதின் மூலம் இந்தியத்தின் முதன்மை உணர்வையே வெளியிடுகின்ருர். இது போலவே திரு. வி. க. தனது "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற கட்டுரையிலும், பிற சந்தர்ப்பங்களிலும் உலகிற்கே இந்தியத்தை தலைமைத்தனம் உடையது ஆக்குகின்ருர். இத்தகைய தீவிர தேசபக்தி உணர்வு வ. வே. சு. ஐயரின் கம்பராமாயண ஆய்விலும் வரம்பு கடந்து வழிந்து ஓடியிருக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே ஆகும்.

ஒப்பியல் திறனாய்வின் பண்பு இது சிறந்தது, இது சிறப்பற்றது என எடுத்துக்காட்டுவதோடு முடிந்துவிடுவதில்லை. படைப்புக்களின் சிறப்புக்கள் அல்லது அவற்றின் சிறப்பின்மைகளுக்கான காரண காரியத் தொடர்புகளை அதற்கே அடிப்படையாக அமைந்த சமூகச் சூழலுடனும், அதன் வரலாற்றுடனும் உள்ள தொடர்பினை அறிந்து கூறுவதும் ஒப்பியலுக்குள் அடங்கவேண்டும் என்பது நவீன ஒப்பியல் அறிஞர்களின் கருத்தாகும்.

இக்கருத்தினைக் கொண்டு நோக்கும் பொழுது வ. வே. சு. ஐயர் மேற்படி ஒப்பியல் பற்றிய கருத்துக்களில் கூடிய கவனம் கொண்டு இருந்தார் எனக் கூறுவதற்கு இல்லை. ஆயினும் வெவ்வேறு மொழி இலக்கியப் படைப்புக்களை ஒன்றுடன் ஒன்று ஒப்புநோக்கும் பண்பு ஐயரிடம் இருந்தமை சிறப்பே ஆகும்.

ஐயருக்குப் பின்னரும் கம்பராமாயணம் பற்றி பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகள் பலது வெறும் அரசியல், சாதி, மதம், ஆரிய திராவிட பேதம் போன்ற பல் வேறு உணர்வுகளின் பாதிப்புக்களைப் பெற்று விளங்குகின்றன. இவை விமர்சனம் என்ற அடித்தளத்தை மறந்த ஆய்வுகளாக அமைந்து விடுகின்றன. இதற்கான உதாரணங்கள் பலதை எடுத்துக்காட்ட இயலும். பிற்காலத்தின் இவ்வாறான கம்பராமாயண ஆய்வுகளோடு வ. வே. சு. ஐயர் அவர்களின் ஆய்வுகளை ஒப்புநோக்கும் பொழுது அவரின் சிறப்பும் புலனுகக்கூடியதாய் உள்ளது. தமிழ் இலக்கிய உலகின் ஒப்பியல் துறையின் முன்னேடியாக அவரை உயர்த்தி விடுவதும் இச்சிறப்பே ஆகும்.

வ. வே. சு. ஐயர் அவர்கள் தனது கம்பராமாயண ஆய்வுகளுக்கு உளவியல் பகுப்பு முறை, சிற்ப முறைமைகளின் அறிவு ஆகியவற்றைத் துணையாகக்கொண்டு நின்றமை பூக்கியமானதோர் விடயமாகும்.

## எது கவிதை?

**உள்ளதைச் சொல்லும் கவிதை**
**உள்ளத்தைத் தொடுவது கவிதை**
**உணர்ச்சியில் பிறப்பது கவிதை**
**உயர்ச்சியில் நிற்பது கவிதை**
**மனிதனைத் தேடுவது கவிதை**
**தெய்வத்தை நாடுவது கவிதை**
**எதையும் பேசுவது கவிதை**
**இதயம் பூசுவது கவிதை.**

– மு. முத்துக்காளத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனை மட்டும் இன்றி தாம் ஆய்விற்கு உட்படுத்திய பிற தமிழ்ப் புலவர்களையும் ஐயர் பிறமொழிக் கவிஞர்களுடன் ஒப்பிட்டே ஆராய்ந்துள்ளார். உதாரணமாக பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' இரண்டாம் பதிப்பிற்கு ஐயர் எழுதிய முன்னுரை குறிப்பிடத்தக்கது. இப்பதிப்பு 1920இல் வெளிவந்தது. மேற்படி முன்னுரையில் நாயக நாயகி பாவத்தில் இறைவன் மனிதன் தொடர்பைக் காட்ட முனைந்த கிறிஸ்தவ, வடமொழி இலக்கியங்களை ஐயர் பாரதியின் கண்ணன் பாட்டோடு ஒப்பிட்டுத் தன் கருத்தை முன்வைக்கின்றார்.

பொதுவாக ஐயரின் இலக்கிய முயற்சிகள் யாவற்றிலும் காணப்படக்கூடியதோர் முக்கிய விடயமே அவருடைய மேற்குலகப் பரிட்சயம் ஆகும். நவீன ஆங்கில இலக்கிய உலகின் விமர்சன முறைகளையும் அதன் உத்திகளையும் அறிந்திருந்த ஐயர் அவற்றை தமிழில் புகுத்தி தமிழின் திறனாய்வுத் துறையின் முன்னோடியாக அமைந்தார். ஐயரைத் தொடர்ந்து தமிழில் இப் பணியைச் செய்தவர்களாக பின் வருவோர் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள் ஆவார். அ. சீனிவாசராகவன் ரா. ஸ்ரீ தேசிகன், பி. ஜீ., டீ. கே. சீ., க. நா. சு., பரசு பாலகிருஷ்ணன், சி. சு. செல்லப்பா, வானமாமலை, கைலாசபதி போன்றோர் ஐயர் மரபில் வந்தவர்களே ஆவர்.

ஐயர் அவர்கள் தமது "KAMBARAMAYANAM A STUDY" என்ற நூலை 1921இல் எழுதினர். ஆயின் இந்த நூல் 1950 லேயே நூலாக வெளி வந்தது, ஐயர் நூல் எழுதிய காலத்திற்கும் அது வெளியிடப்பட்ட காலத்திற்கும் இடையில் இருந்த காலப் பகுதியில் ஐயரவர்களுக்குக் கிடைக்க முடியாத பல புதிய ஆராய்ச்சித் தகவல்கள் மேற்குலக காவியங்கள் தொடர்பால் வெளி வந்தன. மேலும் ஐயர் தனது நூலை சிறைச்சாலைக்குள் வைத்தே எழுதினர். இதனல் ஆய்வுக்குப் பெற வேண்டிய பல உசாத்துணை நூல்களை ஐயரால் பெற முடியாது போய் இருக்கும். இத்தகைய வசதி இன்மைகள் அவருடைய நூலில் சில குறைபாடுகள் ஏற்படக் காரணம் ஆகின. உதாரணமாக இதிகாசங்கள் இலக்கியக் காப்பியங்கள் என்பன பற்றி ஆராய்ச்சிகள் வெளிவந்து இதிகாசங்களுக்கும் காப்பியங்களுக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுகள் உண்டென்பது நிறுவப்பட்டன. ஆயின் ஐயர் நூல் எழுதிய காலத்தில் இதிகாசம், காப்பியம் இரண்டையும் ஒன்ருய் நோக்கிய முறையே காணப்பட்டது. இதனல் ஐயர் அவர்களும் தமது நூலில் இதிகாசம், காப்பியம் ஆகிய இரண்டையும் ஒன்றெனக் கொண்டே கம்பராமாயணத்தை மேற்குலகக் காப்பிய நூல்கள் என அவர் காலத்தில் கருதப்பட்ட நூல்களுடன் ஒப்பிட்டு தன் கருத்துக்களை முன் வைத்தார். இன்றைய அறிவியல் தரவுகள் இத்தகைய ஒப்பீடு அவ்வளவு பொருத்த முடையன அல்ல என்பதையே காட்டுகின்றன. ஆயின் இக்குறைபாடு ஐயரின் குறைபாடு அன்று. அவர்கால அறிவுலகின் குறைபாடே ஆகும்.

ஐயர் அவர்கள் கம்பனை ஹோமர், மில்டன், வெர்ஜில் ஆகிய ஆசிரியர்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து உள்ளார். ஹோமரின் "இலியட்" இதிகாசம். மில்டனின் "சுவர்க்க நீக்கம்" இலக்கியக் காப்பியம். ஆனல் ஐயர் அவர்கள் கம்பனை ஹோமருடனும், மில்டனுடனும் ஒருங்கு சேர வைத்தே ஒப்பீடு செய்துள்ளார். உண்மையில் கம்பன் மில்டனுடனேயே ஒப்பிடத் தக்கவர். ஹோமருடன் அவரை ஒப்பிட முடியாது. காரணம் ஹோமரின் இலியட் இதிகாசம். கம்பனின் இராமாயணம் இலக்கியக் காப்பியம்.

இவ்வாறு சில குறைபாடுகள் ஐயரின் நூலில் காணப்படினும் ஐயர் காட்டிய ஒப்பீட்டு நோக்கு தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு முன்மாதிரியே ஆகும். ஐயரின் நூலைத் தொடர்ந்து பிற்காலத்தில் எழுந்த "கம்பனும் மில்டனும்" "பாரதியும் ஷெல்லியும்" "பாரதியும் தாகூரும்" "கங்கையும் காவிரியும்" போன்ற ஒப்பீட்டு நூல்கள் தோன்ற ஐயரே வழி காட்டியாக அமைந்தார் என்லாம். □


★ நம்புங்கள் - நம்பிக்கைதான் சத்தியம். மற்றவை, மாறத்தக்க, மாறவேண்டிய, மாறித் தீரப் போகிற சத்தியங்கள்.

\- ஜெயகாந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா
# ண
# வ
# ர்
# பக்கம்



## அப்போஸ்தலர் பணி V

### துணைத்தொண்டர் பிலிப்புவின் பணி

மூடியப்பரின் இறப்புக்குப் பின் வேத கலாபனை அதிகரித்தது. ஜெருசலேமை விட்டு ஓடி விடுவதே சிறந்தது எனக் கருதி பலர் சிதறுண்டு போனார்கள். சென்ற இடங்களிலெல்லாம் இயேசுவைப் பற்றியும், பெந்தகோஸ்து தினத்தன்றும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற சம்பவங்களையும் மக்களுக்கு அறிவித்தனர்.

#### - சமாரித்தர்களை திருச்சபையில் சேர்த்தல் -

துணைத் தொண்டர்களில் ஒருவரான பிலிப்பு சமாரியாவுக்குச் சென்றார். சமாரித்தர்கள் யூதர்களால் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருப்பினும் பிலிப்புவை மகிழ்ச்சியோடு வரவேற்றனர். பலர் அவரது போதனையைக் கேட்டு விசுவசித்து இயேசுவை வாக்களிக்கப்பட்ட மெசியாவாக ஏற்றுக் கொண்டனர். அவரது பணி எவ்வளவுக்கு வெற்றியளித்ததெனில் ஜெருசலேம் திருச்சபை அவரது பணியைப் பற்றிக் கேள்வியுற்று புதிய சமூகத்தை நெறிப்படுத்த இராயப்பரையும், அருளப்பரையும் சமாரியாவுக்கு அனுப்பி வைத்தது. அப்போஸ்தலர்கள் வந்து சமாரித்தர் மீது கைகளை விரிக்கவே சமாரித்தர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டனர். இத்தகைய வல்லமை அப்போஸ்தலர்களுக்கு மட்டும் உரியதொன்றாக இருந்தது. துணைத் தொண்டர்களுக்குக் கூட கிடைக்கவில்லை. பிலிப்பு ஒரு துணைத் தொண்டராக இருந்தும், அவர் துணைத் தொண்டருக்குரிய அறப்பணியோடு மட்டும் நின்று விடவில்லை அவரும் நற்செய்தியை அறிவிக்கின்றார். திருமுழுக்கு அளிக்கின்றார், புதுமைகள் பல செய்கின்றார், பேய்களைக் கூட விரட்டுகின்றார். ஆயினும் கைகளை விரித்து பரிசுத்த ஆவியை அளிக்கும் வல்லமை அவருக்கு இருக்கவில்லை. இத்தகைய வல்லமையைப் பணம் கொடுத்துப் பெற விரும்பிய சீமோனை இராயப்பர் சபிக்கின்றார்.

#### - ஆபிரிக்க இனத்தவன் திருமுழுக்குப் பெறுதல் -

பிலிப்பு சமாரியாவில் தொடர்ந்து நிற்கவில்லை. காசாவுக்குச் செல்கின்றார். போகும் வழியில் ஆபிரிக்க இனத்தவனாகிய ஒரு முக்கிய மனிதனைச் சந்திக்கின்றார். அவன் எத்தியோப்பிய அரசியான காந்தாக்கேயின் பொருளமைச்சன், அவன் கடவுளுக்குப் பயந்தவன். யூத மறையின் பல கருத்துக்களை ஏற்றுக் கொண்டவன். ஜெருசலேமிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த அவன் தேரில் உட்கார்ந்த படியே இறைவாக்கினர் இசையாஸ் துன்புறும் ஊழியனைப் பற்றி எழுதிய பகுதியைப் படித்துக்கொண்டு வந்தான்.

ஆவியால் ஏவப்பட்ட பிலிப்புவும் தேரை நெருங்கிச் சென்றார். அவன் படித்தது அவனுக்கே புரியவில்லை என்பதால் அதற்கு விளக்கம் கூறமுன் வந்த பிலிப்புவின் உதவியை மனமுவந்து ஏற்றான். பிலிப்பு அவனுக்கு நசரேத்தூர் யேசுவைப்பற்றி எடுத்துக் கூறுகின்றார். அவன் பிலிப்பு கூறியதை விசுவசித்ததால் பாதையோரம் அமைந்திருந்த நீர்ச்சுனையொன்றில் அவனுக்கு பிலிப்பு திருமுழுக்கு அளித்தார்.

இவ்விதம் ஆரம்பத்தில் யூதர்களை மட்டும் கொண்டு உருவான திருச்சபை படிப்படியாக சமாரித்தர்கள், ஆபிரிக்க இனத்தவன் போன்றவர்களையும் சேர்த்து வளர்ச்சியடையத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யூத வார்ப்பு உடைபடுகின்றது -

ஆபிரிக்க இனத்தவன் திருச்சபையில் சேர்ந்தது பற்றிய செய்தி இராயப்பருக்கு மனக்கலக்கத்தை உண்டாக்கியிருக்க வேண்டும். சமாரித்தர்கள் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது அவ்வளவு பாதகமாகத் தெரியவில்லை. ஆனல் ஆபிரிக்க இனத்தவன் புறவினத்தானுக இருந்ததனுல் அவன் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தத்தான் போகின்றது. ஏனெனில் இராயப்பரும் அவர் நண்பர்களும் யூதர்களாக இருந்தனர். தங்களின் யூத மறையைப் பற்றி பெருமிதம் அடைபவர்களாகவும் இருந்தனர். ஆலயத்தை நேசித்தனர், ஆலயத்துக்குள் வழமைபோல் போய் வர முடிந்தது. ஆனல் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட புற இனத்தவர்களை ஆலயத்துக்குள் கொண்டு போக முடியாதே. ஏனெனில் கடவுள் யூதரோடு செய்து கொண்ட உடன்படிக்கையிலிருந்து புறவினத்தார் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

## இராயப்பரின் மனப்போராட்டம்

இராயப்பரின் நிலை இருதலைவாய்க் கொள்ளி எறும்புபோல் இருந்தது. புதிதாக மனந்திரும்பிய சமாரித்தர்களையும் புற இனத்தவனையும் திருச்சபையின் தலைவராகிய அவர் புறக்கணிக்க முடியாது. ஏனெனில் அவர்களும் திருச்சபையின் உரிமையுள்ள அங்கத்தவர்கள். அவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து மனந்திரும்பி வந்திருக்கின்றனர். இயேசுவை மெசியாவாக ஏற்றிருக்கின்றனர். அவர் வழியாகத் திருமுழுக்குப் பெற்றிருக்கின்றனர். யூதர்களைப் போன்று அவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டனர். ஆனல் மறுபக்கம் யூதர்கள் இவர்களை ஆலயத்துக்குள் அனுமதிக்க மாட்டார்கள். இதுதான் இராயப்பரின் மனக் கலக்கத்துக்கு காரணியாக அமைந்தது.

இத்தகைய மனப்போராட்டத்துடன் இராயப்பர் போதகப் பணிக்காக யோப்பாவுக்குப் புறப்பட்டார். யோப்பா ஒரு சிறிய வியாபாரத் துறைமுகம். அங்கு தோல் பதனிடும் சீமோன் என்பவரின் வீட்டில் தங்கினர். ஒரு நாள் மதிய வேளையில் வீட்டு மாடிக்குச் சென்று தன்னை வருத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அவ் வேளையில் அவர் கண்ட காட்சி பிரச்சினைகளுக்கு ஒரு தீர்க்கமான முடிவாக அமைந்தது.

## காட்சியும் விளக்கமும்

இராயப்பர் வீட்டு மாடியில் நின்றதால் கடலில் சிறிய படகுகள் பாய்விரித்துச் செல்வதைப் பார்த்திருப்பார். எனவே அவரது காட்சியிலும் பெரிய பாய்விரிப்பு ஒன்றைக் கண்டார் என்பது அதிசயமல்ல. அவர் பசியாகவும் இருந்தார். எனவேதான் ''இராயப்பா, எழுந்திருந்து விரும்பிய எந்த மிருகத்தையாவது கொன்று சாப்பிடு'' என்ற குரல் கேட்டது. பாய்விரிப்பில் இருந்த மிருகங்களில் சில, யூதர்களால் உண்ணப்படக்கூடாதவையாகவும் அசுத்தமானவையாகவும் கருதப்பட்டன. இராயப்பர் யூதனுக இருந்ததால் தயங்கினுர். அவருக்குத் தக்க பதில் கிடைக்கின்றது. 'நான்தான் அவற்றைப் படைத்தேன். எனவே அவற்றை அசுத்தம் என்று சொல்லாதே'' என்ற குரல் அவரைச் சிந்திக்க வைத்தது.

அவரது சிந்தனைக்கு விடை கூறுவது போல் கதவில் யாரோ தட்டுவது கேட்டது. அவருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டனர். மூன்று உரோமைப் போர் வீரர்கள்

---

## பாரதியின் வீரம்..!

□ எல்லோருக்கும் நம் நாடு தாய்நாடாக இருக்க பாரதிக்கு நம் நாடு ''தந்தையர் நாடாகக்'' காரணம் என்ன?

★ தாய் மென்மையானவள். வீரம் அவளிடம் கொஞ்சம் நொண்டியடிக்கும். 'தாய்நாடு' என்ற நினைவு கூட நம்மிடம் கனிவை ஏற்படுத்தி 'திண்' தோள்களைத் தாழ்த்தி விடக் கூடாது என்று நினைத்தான் பாரதி. அதனுல்தான், எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே என்று கர்ஜித்தான்.

- ஷாந்தினி பதில் (நம் வாழ்வு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைச் சந்திக்கக் காத்து நின்றனர். தங்களது தலைவராகிய கோர்னேலியு அவரை செசாரியாவுக்கு அழைத்து வரும்படி கூறியதாகவும் கொர்னேலியு கண்ட காட்சியைப் பற்றியும் எடுத்துக் கூறினர். அவர்களை வரவேற்று உபசரிக்க இராயப்பர் கதவைத் திறந்தது போன்று அவரது மனமும் திறந்தது. தான் கண்ட காட்சியின் விளக்கமும் தெளிவாகியது. அவர்கள் புறவினத்தாராக இருந்தாலும் புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள் அல்ல என்பதை உணர்ந்தார், அவர்களும் கடவுளால்தான் படைக்கப்பட்டவர்கள். கடவுளின் பிள்ளைகள் என்பது உறுதியாகிவிட்டது. எனவே அவர் அதிசயமான செயலைச் செய்தார். அவர்களை உள்ளே அழைத்து அன்றிரவு தங்குவதற்கு ஏற்பாடு செய்தார். மறுநாள் அவர்களுடனும் தன் நண்பர் சிலருடனும் செசாரியாவுக்குப் பயணமானார்.

## கொர்னேலியுவும் குடும்பத்தினரும் திருமுழுக்குப் பெறுதல்

கொர்னேலியு நூற்றுவர் தலைவன் - புற இனத்தவன், ஆயினும் கடவுள் பயமுள்ளவன். அவன் இராயப்பரைக் கடவுளின் தூதுவராகக் கருதியவனாய் அவரைக் கண்டதும் அவருடைய காலில் விழுந்து வணங்கினான். அவன் ஏற்கனவே தன் வீட்டில் நண்பர்கள், உறவினர்கள், வீரர்கள், ஊழியர்கள் அனைவரையும் கூட்டி வைத்திருந்தான். இராயப்பர் அவர்களுக்கு இயேசுவைப்பற்றி எடுத்துக் கூறினார். யோப்பாவில் வீட்டு மாடியில் கண்ட காட்சியின் முழுமையான விளக்கம் இப்பொழுது தன்முன்னே நிகழ்வதாக உணர்ந்தார். கடவுள் தன் மூலம் எதை நிறைவேற்ற விரும்புகின்றார் என்பது தெளிவாகியது. தன் முன்னால் அமர்ந்து இருப்பவர்கள் அனைவரும் புறவினத்தாராய் இருப்பினும் அவர்களையும் இறைவன் புதிய மந்தையில் இணைக்க விரும்புகின்றார் என்பதைப் புரிந்து கொண்டார். அங்கு ஒரு புதுமை நிகழ்ந்தது. பெந்தகோஸ்து தினத்தன்று இராயப்பரும் ஏனைய சீடர்களும் எவ்வாறு மகிழ்ச்சியில் பரவசமடைந்திருந்தனரோ அதே போன்ற ஒரு நிகழ்வைத்தான் இங்கும் காண முடிந்தது. இராயப்பர், அவர்கள் அனைவருக்கும் திருமுழுக்குக் கொடுத்து திருச்சபையில் அங்கத்தவராக்கினார்.

இராயப்பர் ஜெருசலேமுக்குத் திரும்பிய போது யூத கிறிஸ்தவர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் தங்கள் எதிர்ப்பை எடுத்துக் காட்டினர். இராயப்பரின் பதில் சுருக்கமானதாகவும், மிக எளிதானதாகவும் இருந்தது. அது தன்னுடைய செயல் அல்ல கடவுளுடைய செயல் என்று கூறி தான் கண்ட காட்சியையும் அதன் விளக்கத்தையும் எடுத்தியம்புகின்றார். "இதைக் கேட்டதும் அவர்கள் அமைதி அடைந்தனர்" என்று லூக்கா அழகாகத் தொகுத்திருக்கின்றார். புற இனத்தவர்களும் மனந்திரும்ப இறைவன் சந்தர்ப்பத்தை அளித்து விட்டார். திருச்சபையானது யூத குறுகிய சுவர்களை உடைத்தெறிந்து விட்டு வெளி வந்துவிட்டது. புற இன உலகிலும் காலடி எடுத்து வைத்து விட்டது.

## வினாக்கள் -

1. சமாரியா நாட்டில் அப்போஸ்தலர்கள் ஆற்றிய மறை பரப்புப் பணிகள் எவை?
2. பிலிப்பு, சமாரிய நகர் மக்களுக்கு மெசியாவைப்பற்றிப்போதிக்கும்போது என்ன நடந்தது?
3. சமாரியா சீமோன் பரிசுத்த ஆவியை அளிக்கும் வல்லமையை விலைகொடுத்து வாங்க முயற்சித்தபோது இராயப்பர் அளித்த பதில் என்ன?
4. "கடவுளுக்குத் தடைசெய்ய என்னால் எப்படி முடியும்" இராயப்பர் இவ்வாறு கூற நேர்ந்ததற்கான சம்பவம் என்ன?
5. சந்தர்ப்பம் கூறுக: "எழுந்திரும் நானும் மனிதன் தான்"
6. இராயப்பர் யோப்பாவில் இருக்கும் போது நடைபெற்ற இரண்டு முக்கிய சம்பவங்கள் எவை?
7. பிலிப்பு தனது நற்செய்தியை சமாரியாவில் போதித்தார். இதனால் உண்டான இரண்டு பலாபலன்களைத் தருக.
8. மந்திரவாதி சீமோனின் வரலாற்றிலிருந்து நாம் பெறும் படிப்பினைகள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5




மேரியை வழியில் காணும் சந்தர்ப்பங்களில் ஓரிரு முறை ஒரு பெண்ணைப் போல் நெளிந்து வளைந்து அவன் வெட்கப்பட்டுச் சிரித்துக்கொண்டது அவளுக்கு நினைவு வந்தது. பொதுவாக பெண்களைக் கண்டால் சிரிக்கவும் மாட்டான். தலையைக் குனிந்துகொண்டு போய்விடுவான்.

சோதனை காலங்களில் 'டிஸ்கஸன் குருப்ஸ்' உருவாகும்போதுகூட கிறிஸ்ரோபர் தனிதான். 'இந்த குருப்ஸ் இல் சேர்ந்து நேரத்தை வீணடிப்பதுதான் மிச்சம்...' என்பது அவன் எண்ணம். அவன் வாசிப்பது அகோர வாசிப்பு. நுண்மதி அவ்வளவு உயரம் என்று சொல்ல முடியாவிட்டாலும்கூட... அவனது கடின உழைப்பு அவனைப் படிப்பில் மெதுமெதுவாக முன்னுக்குக் கொண்டுவந்திருந்தது. அடுத்தடுத்த சோதனைகளில் அவனே 'ரொப்' பண்ணுவான் என்பதற்கான அறிகுறி தோன்றத் தொடங்கியிருந்தது.

இந்த நிலையில்... எப்போதும் அவன் தன்னை முந்தி விடக்கூடும் என்ற நிலையில்... கிறிஸ்ரோபருடன் 'டிஸ்கஸன் குறுப்' சேர மேரிக்கு உள்ளூர நல்ல விருப்பம். அதேநேரம் அவன் யாரையும் சேர்த்துக் கொள்ளமாட்டான் என்ற பயமும் கூட. கிறிஸ்ரோபர் கதைத்த இந்த சந்தர்ப்பத்தை அவள் உருப்படியாகப் பயன்படுத்திக்கொள்வோம் என்று நினைத்தாள்.

''தான் இண்டைக்கு வீட்டை போகேல்லை. சரியான லேற்றுப் போயிட்டுது. நளினியவை இருக்கிற றூமுக்குத்தான் போப்போறன்... கூட்டிக்கொண்டு போய் விடுறியா?''

ஏதோ ஒரு அசட்டுத் துணிவில் கேட்டுவிட்டாள். திடீரென்று ஆகாயத்தைப் பார்த்தாள். இருண்டுவரும் வானம் ஒரு டெக்னிக் கலர் சினிமா காட்டுவது மாதிரி இருந்தது. விரைவில் இந்த வர்ணங்கள் அழிந்து வானம் முழுவதும் இருண்டு விடும் என நினைத்தாள்.

நேரம் போய்விடுகிற சந்தர்ப்பங்களில் பெண்களை அதே 'பாஜ்' ஆண்கள் கூட்டிக்கொண்டு போய் விடுவது சாதாரண நிகழ்வுதான் அங்கே. அவள் ஒன்றும் புதிய விடயத்தைக் கேட்கவில்லை. ஆனால் கிறிஸ்ரோபர் உசாரானான்.

''சொறி மிஸ்... என்னாலை முடியாது... கேள்ஸ் ஐக் கூட்டிக்கொண்டு அவைக்குப் பின்னாலை திரிய எனக்கு நேரமில்லை. எனக்குப் படிக்க நிறைய இருக்கு...''

கூறிவிட்டுச் சைக்கிளை எடுத்துக்கொண்டு 'ஜிவ்'வெனப் பறந்து போய்விட்டான் அவன்.

அவன் சொன்ன குரலில் 'திமிர்' இருக்கவில்லை. மிக மெதுவாக, பணிவாக, ஒரு 'மென் தன்மையுள்ள பெண்' கதைப்பது போலத்தான் கூறினான். ஆனாலும் சொன்ன விடயம்!

மேரிக்கு இரத்தம் முகத்திற்கு ஏறிக் கண்கள் ஜொலித்தன. எவ்வளவு அவமானம்! பார்வை ஊடுருவும்போது கூச்சம் குறுகுறுக்கத் தலையைத் தொங்கப்போட்டுக் கொள்கிறவன். எந்த ஆணும் இதுவரை செய்யாத முறையில் அவளை அவமதித்துவிட்டானே!

சரி பார்ப்போம். வாழ்க்கைகள் எல்லாமே ஒவ்வொரு சிலுவைப் பாதைகள்தாம்!

பல்கலைக்கழகத்தினுள்ளே புதிதாகக் கட்டப்பட்டிருந்த 'சேர்ச்சின்' மணி எவ்வித சலனமுமற்றுத் தொங்கியது. அதைக்கடந்து வரும்போது மேரி சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டாள். காதுக்கு இமைஇல்லாததால் தான் அப்படிச் செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் அவன் கூறிய வார்த்தைகள் பலமுறை திரும்பத் திரும்ப எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.

''கிருப்ஸ் போன்ற பலர் எத்தினையோ இடங்களுக்குத் தம்முடன் வரும்படி பலமுறை கேட்டும் போக மறுத்துக் கிறுக்குக்காட்டிய உனக்கு இந்த அவமானம் வேணுடியதே''...

குரல் ஒன்று கேட்டது. அவள் திரும்பிப் பார்க்கவில்லை. அந்தக் குரல் அவளுக்கு உள்ளேயிருந்தே கேட்டது என்பது அவளுக்குப் புரிந்தது.

மூடிக்கொண்ட கண்களைத் திறந்தபோது கிருப்ஸ் அருகில் நிற்பது தெரிந்தது.

''வீட்டையோ போகப் போறிங்கள் இனி?'' நடைபெற்ற விடயம் பற்றி எதுவும் தெரியாதவன் மிகச் சாதாரணமாயிக் கேட்டான்.

''இல்லை. நளினியின்ரை றூமிலை நிக்கப் போறன்...'' என்றாள். குரல் கிணற்றின் ஆழத்திலிருந்து எழுவது போல் கேட்டது.

''தனியப் போகப் பயமில்லையா?... பேய், 'பிசாசு பிடிக்காதா அழகான பொம்பிளையளை...?'' அவன் சிரித்தபடி கேட்டான்.

''பேயாவது பிசாசாவது! யேசுவே, மாயாயே, சூசையப்பரே, அந்தோனியாரே... எண்டு சொன்னால் அதுகள் பயந்து ஓடியிடுங்கள்...''

''பிள்ளையாரே, கந்தசுவாமியாரே எண்டு சொல்ல ஒருவேளை ஓடாட்டியும் யேசுவே, மரியாயே எண்டு சொன்னால் ஓடியிடுங்கள்... சரி நான் சொல்லிக்கொண்டு பின்னாலைவாறன். வாங்கோ'' என்று சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தான் கிருப்ஸ்.

''பகிடியா இருந்தாலும் கூட.... தன்னுடைய சமயத்தை எவ்வளவு இலகுவில் எனக்காக விட்டுத்தருகிறான் இவன்'' என்று நினைக்காமல் இருக்க மேரியால் முடியவில்லை. அவள் மௌனமாய் நடந்தாள்.

உட்புழுக்கமும் வெளிப் புழுக்கமும் அவளை அழுத்துகின்றன. கண்களில் ஒரு பரிதாபத்துக்குரிய சோர்வு தென்படுகிறது.

''இந்த முறை அசெஸ்மென்றிலை கிறிஸ்ரோபர் உங்களை முந்திடுவான் போலை இருக்கு...''

கிருப்ஸ் சாதாரணமாகவே உரையாடலைத் தொடங்கினான்.

''அதுதான் எங்கடை டிஸ்கஸன் குறுப்பிலை கிறிஸ்ரோபரையும் சேர்த்தால் நல்லது எண்டு நினைச்சனான். அந்தாள்... சேராது... சரியான கிருக்... என்ன...?''

''அது ஒரு புத்தகப்பூச்சி

## தொடர்கதை

## உடன் கட்டை ஏறிய கணவன்

கணவன் மரணமாகும்போது மனைவியும் அதே சிதையில் தன்னை எரித்துக்கொள்வது பழங்கதை.

60 வயது மனைவி இறந்து போனாள். ஊர் முழுவதும் கூடி அவளைச் சிதையிலிட்டு எரியூட்டிவிட்டு அடுத்திருந்த ஆற்றில் நீராடப் போய்விட்டது.

அன்புக்கினிய அருமைத் துணைவியின் பிரிவுத் துயர் தாளாத 63 வயதுக் கணவன் அதே சிதையில் புகுந்து தன்னையும் மாய்த்துக் கொண்டான்.

இந்தியாவில் பந்தி என்ற கிராமத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சி இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோடை முனிவர். நெடுகத் தனிய இருந்து படிக்கும். கேள்ஸ்ஸோடை கதைக்கிறதெண்டாலே அதுக்கு நடுங்கும். ஏதும் பழைய 'ஃபிறஸ்'' இருக்கோ தெரியாது. ''என்னடப்பா இப்பிடி இருக்கிறாய்?'' எண்டு யாரும் கேட்டால், ''நீடிங் மேக்ஸ் ஏ மான் பேர்டுஃபக்ற்'' எண்டு தத்துவம் சொல்லும்... அதின்ரை கதையை விடுங்கோ... அரை விசர்...''

''எண்டாலும் கிறிஸ்ரோபருக்கு நிறைய விஷயங்கள் பரவலாத் தெரியும் எண்டதை ஒருத்தரும் மறுக்கேலாது...''

''அவனோடை டிஸ்கஸன் குரூப் சேர்ந்தால் உமக்கும் 'பெண்பூச்சி' எண்டு பட்டம் வைப்பாங்கள்...''

''வைக்கட்டும். அந்தப் பட்டம் எம்.பி.பி.எஸ். பட்டத்தோடை 'பெஸ்ற்கிளாஸ்' சேந்துவர உதவும் எண்டால் பரவாயில்லை...''

''பெண்பூச்சி எண்டாப் போலைதான் ஞாபகம் வருது. அவனுக்கு ஏன் பூச்சி எண்டு பட்டம் வைச்சதெண்டு உங்களுக்குத் தெரியுமே?''

''நெடுகப் படிக்கிறது. புத்தகப் பூச்சி...''

''அப்பிடித்தான் நானும் கனகாலம் நினைச்சிருந்தனான். அண்டைக்கு அவன்ரை றூம் மேற் ராஜா சொன்னான்... பூச்சிகள் எதையும் எங்கை கண்டாலும் உடனை பிடிச்சுச் சாக்கொல்லிப் போடுவானாம்...''

''ஆனால் ஆள் சரியான கடவுள்பக்தி எண்டு கேள்வி''

''ஓ... அவன்ரை றூமைப் போய் ஒருநாள் பாத்தனான். கட்டிலுக்கு மேலை யேசு படம் வைச்சு அதுக்குப்பக்கத்திலை அடுத்த அசெஸ்மென்ற் திகதி எழுதி வைச்சிருப்பான். இன்னும் சோதினைக்கு மூன்று நாள்... இரண்டு நாள்... இன்னும் ஒரு நாள்... எண்டு எழுதியிருப்பான். அந்த மூண்டு நாளும் படிக்கவேண்டிய விஷயங்களை 'ரைன் ரேபிளை' அவன் போட்டிட்டால் பிறகு கடவுள்தான் வந்தாலும் மாத்தமுடியாது. அதுதான் போன சண்டே... றெஃபியூஜீஸ்ஸுக்கு உடுப்புச் சேர்க்கவும் ஆள் வரேல்லை''

அதுகும் நல்ல பழக்கந்தானே. அப்படியானவை வாழ்க்கையிலை எதையும் திட்டமிட்டுச் செய்வினம். தோல்வியடையமாட்டினம்''

''ஆனால் அண்டைக்கு... எத்தினை நாள் போகமுடியாமல் இருந்த கடற்கரைக்கு நாங்கள் போனம். அதுகும் இந்திய அமைதிப்படை வந்திருக்கிறபடியால் போனம்... அவன் அண்டைக்கு அருமையான கொஞ்சும் கடல் அலைகளையும் வீசும் இளந்தாழை மணத்தையும் தவறவிட்டிட்டான் எண்டுதான் நான் சொல்லுவன்... இப்படியானவை வாழ்க்கையிலை எதையும் அனுபவிக்க மாட்டினம்''

''இது யாரின்ரை கவிதை வரி? சொந்தமோ... இரவல்தானோ?'' என்று கேட்டு இமை வெட்டினாள் மேரி.

''இரவல்தான்'' என்று சிரித்தவன் சைக்கிளை மறுபக்கத்திற்கு மாற்றிக்கொண்டு அவளுக்கு அருகில் நடந்தான்.

மேரி சிறிதுநேரம் அவனுடைய கருகரு வென்று கிடந்த கட்டை மயிரைப் பார்த்தபடி மௌனமாய் நடந்தாள். இவனுடைய இந்தக் கட்டைத் தலைமயிர் இவனது ஆளுமையின் எந்தப் பகுதியைக் காட்டுகிறது.

அந்தச் சிந்தனை பதிலின்றி மறைய அகதிகளுக்கு உடுப்புச் சேர்க்கச் சென்ற ஞாயிறு மனதில் வந்தது.

அன்று பல்வேறு ஊர்களுக்குச் சென்று நிறைய நிறையவே உடுப்புகளைச் சேர்த்துக்கொண்ட பல்கலைக் கழக மாணவர்கள் இறுதியாகக் காரைநகருக்குச் சென்றபோது 'கசூவாரினா' கடற்கரைக்கும் சென்றனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுப் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்ட இடைக் காலம் என்றபடியால் அந்தக் கடற்கரைக்குச் செல்லக்கூடியதாய் இருந்தது. சண்டிக் குழந்தையை அடக்க முயன்று தோற்றுப்போய்க் கொண்டிருந்த கடல் அவர்கள் எல்லாரையும் மிகவும் ஈர்த்தது.

(தொடரும்)

---

✶ ஞானிகளுக்கும் துஷ்டர்களுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இருவரும் துன்பம் தருபவர்கள். ஆனால் ஒரு வித்தியாசம், ஞானிகளின் பிரிவு பெருந் துன்பம் தரும். துஷ்டர்களின் உறவு பெருந் துன்பம் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாள் ஆண்டு கொண்டாட்டங்கள் பற்றிய நெறி முறைகள்

*1987ம் ஆண்டு பரிசுத்த ஆவி ஞாயிறன்று ஆரம்பித்த 'மரியாள் ஆண்டு' இவ்வருடம் ஆவணித்திங்கள் 15ம் நாள் மரியாளின் விண்ணேற்பு விழாவுடன் முடிவுற்றதை நாம் அறிவோம் 'மரியாள் ஆண்டு' சிறப்பாக அமைவதற்கு திருத்தந்தையினால் உரோமையில் நியமிக்கப்பட்ட மத்திய குழுவானது 'மரியாள் ஆண்டின்' நிறைவையொட்டி தலத்திருச்சபைகளின் சகல மேய்ப்பர்களுக்கும் அனுப்பி வைத்த செய்தியினை எமது ஆயரும் பெற்றுள்ளார். அச்செய்தியில் பொதிந்திருந்த சில சிறப்பான நெறி முறைகளை இங்கு தருகின்றோம்.*

( ஆ - ர் )

'மரியாள் ஆண்டிலே' தூய கன்னி மரியாளுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமானது, மரியாள் பற்றிய ஆராய்ச்சி, அவள் பற்றிய மறையறிவு, அவள் பெயரால் நடைபெறும் வழிபாட்டு நடைமுறைகள், பொது நிலையினரிடையே நிலவிடும் பக்தி முயற்சிகள், இரக்கத்தின் அன்னையாகத் துலங்கிடும் அவள் நினைவாகச் செய்யப்படும் இரக்கச் செயல்கள் ஆகியவற்றின் ஒன்றிணைப்பிலேயே தங்கியுள்ளது.

திருச்சபையின் ஒவ்வொரு ஆக்கபூர்வமான செயற்பாடும் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்விலும், ஒவ்வொரு தலத்திருச்சபையின் வாழ்விலும், தன்னிகரற்ற தூய கன்னி மரியாள் பெயரால் நிகழும் பல்வேறு வகையான சான்று நிகழ்ச்சிகளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைப்பதிலும், அவற்றை மீளாய்வு செய்வதிலும், அவற்றைப் பொது நிலையினரின் கவனத்திற்குக் கொண்டு வருவதிலும் கருத்தாய் இருப்பதன் காரணம், இவ் வழியில் தான் திருச்சபையானது தொடர்ச்சியான புதுப்பித்தலை அடைய முடியும். இந்த நோக்கம் நிறைவுற, திருத்தந்தை 6ம் சின்னப்பர் 1975ல் புனித ஆண்டை முன்னிட்டுப் பிரகடனப் படுத்திய 'அழகிய பாதை'க்கு எமது கவனம் திருப்பப்படவேண்டும். ஏனெனில் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் திருச்சபையிலும், தனிப்பட்ட கிறிஸ்தவனின் வாழ்விலும் விளங்கியதும் அனைத்தையும் ஒருங்கிணைத்ததுமான மரியாள் பக்தியானது, உயர்ந்ததும், உலகளாவியதுமான பாதையாகக் கருதப்படுகின்றது.

கிறிஸ்து சகாப்தத்தின் மூவாயிரம் ஆண்டின் ஆரம்பக் கட்டத்திலே காலடி வைக்கப் போகும் நாம், இறைவனின் அன்னையின்பால் நமது கவனத்தைத் திருப்புவதன் முக்கிய நோக்கம் ஒவ்வொரு தலத் திருச்சபையும் உண்மையான புதுப்பித்தலுக்கு தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்பதனாலாகும்.

முதற்கண் மரியாள் பக்தியானது, முழுத் திருச் சபையிலும் தாக்கத்தையும், செயல் விளைவுகளையும் உண்டு பண்ணக்கூடிய 'மரியாள் பற்றிய திருச்சபையின் கோட்பாடுகளை' கற்பதில் தங்கியுள்ளது. ''திருச்சபை எந்த நிலையில் முழுமையாக இருக்க விரும்பி எதிர்பார்க்கின்றதோ, அந்த நிலையைச் சிறிதும் பழுதற்ற ஒரு மாதிரி போன்று மரியாளிடம் கண்டு மகிழ்வுடன் தியானிக்கின்றது.'' (இறைபணி 103) திருச்சபையின் வழிபாட்டில் சரிவர உணரப்பட்டும், தியானிக்கப் பட்டும் வரும் மரியாள் பற்றிய திருச்சபையின் கோட்பாடுகள், தொடர்ச்சியான புதுப்பித்தலுக்கு சங்கிலியாக அமைகின்றன. இறைவார்த்தையை அறிவிப்பதிலும், இறையரசின் நிறைவுக்காக அயராது உழைப்பதிலும் தன்னையே அர்ப்பணித்து, வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாத இடத்தைப் பற்றிக்கொண்ட கன்னி மரியாளின் அழைப்பைப்போன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் அழைக்கப்படுகின்ருன்.

இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த கிறிஸ்தவ பாரம்பரியங்களை எவ்வாறு உலகின் பல்வேறு கலாச்சாரங்களிலும் தாயகமாக்குவது என்பது இன்று சகல திருச்சபைகளும் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகும். இரண்டாம் வத்திக்கான் சங்கமானது பல தடவைகளில் இது பற்றி வலியுறுத்தியிருக்கின்றது. (காண் - இறைபணி 37-40; திருச்சபை - 17; இறை வெளிப்பாடு - 21-26;) தூய கன்னி மரியாளைப் பொறுத்தமட்டிலும், அவள் பற்றிய ஆராய்ச்சிகள், வழி பாட்டு மொழிகள், படங்கள் அல்லது சிற்பம் பற்றிய கட்டுரைகள், பொதுவாக ஓவியங்கள் அனைத்தும் ஒவ்வொரு கலாச்சாரத்திலும் உருவெடுக்க ஆக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியது மிக அத்தியாவசியமானதாகும். அப்பொழுதுதான் மரியாளோடு தொடர்பு பட்ட நற்செய்தி உண்மைகள் நன்கு புரிந்து கொள்ளப்பட்டு எவ்வித மாறுபாடின்றியும், ஒவ்வொரு கலாச்சாரத்திலும் வேரூன்றி தழைத்தோங்க வழியாய் அமையும்.

இறுதியாக, ஒவ்வொரு திருச்சபையும் தனது மேய்ப்புப் பணிக்கு பின்வருபவற்றிலிருந்து இறை ஏவுதலுக்குட்பட்ட செய்திகளை பெற்றுக்கொள்ளட்டும்.

**" மரியாளைத் தனதாக்கிக் கொள்வது " என்பது என்ன ?**

முதலில் புனித சூசையப்பர் செய்ததைப் போன்றும் பின்னர் புனித அருளப்பரைப் போன்றும் அதன் பின்னர் உள்ளார்ந்த ஆன்மீக உறவிலும் வளர்ந்து ஞான வாழ்வின் பயிற்சிக்கூடமாக மாறி தொடர்ச்சியான புதுப்பித்தலுக்குட்படவேண்டும். □

## எப்போது?

கட்சி மாறுகிருர்கள்
காட்சி மாறுகிருர்கள்
மனம் மாறுகிருர்கள்
மதம் மாறுகிருர்கள்
இவர்களெல்லாம் மனிதர்களாய்
மாறுவது எப்போது?

- அமுதேதோன்



## சந்திரா அடிகளாருக்கு தமிழ் நாட்டில் அஞ்சலி

கடந்த ஜூன் திங்கள் 6ம் நாள் வெறிபிடித்த பிற்போக்கு சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட அருள் திரு. சந்திரா பெர்ணண்டோ அடிகளாருக்கு தமிழ் நாட்டிலுள்ள அவரது நண்பர்களும் சகோதரக் குருக்களும் இணைந்து அஞ்சலி வழிபாடொன்றை நடத்தினர்.

கடந்த ஓகஸ்ட் திங்கள் 9ம் நாள் சென்னையிலுள்ள விண்ணரசி ஆலயத்தில் நடைபெற்ற இவ்வழிபாட்டு அஞ்சலியில் இருபது குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். புதிய பாடல்களைக் கொண்ட வழிபாட்டு இதழ் ஒன்றையும் வெளியிட்டனர்.

இது பற்றி எமது ஆயருக்கு அவர்கள் அனுப்பி வைத்த செய்தியில் —

" எங்கள் அன்புக்கும், பாசத்திற்கும் மிகவும் நெருக்கமான அருட்திரு. சந்திரா பெர்ணண்டோ அடிகள் குண்டடி பட்டு மரணமடைந்த துயரச் செய்தியைக்கேட்டு மன அதிர்ச்சியுற்ருேம். அவர் எங்களால் நிரம்ப விரும்பப்பட்டவர். அவரது பிரிவை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. இந்த வேதனையான நேரத்தில் உங்களுக்கும் உங்களுடைய மக்களுக்கும் ஆறுதலாக இருக்க விரும்புகிருேம். அவருக்காக திருப்பலி நிறைவேற்றி மன்ருடுகிருேம் "

என்று தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்செய்திப் பணியில் சமகாலப் பிரச்சினைகள்

- அருள்திரு. பி. ஜோசப் -

''உலகெல்லாம் சென்று நற்செய்தியினை அறிவியுங்கள்'' என இயேசுபிரான் மொழிந்து இருபது நூற்றாண்டுகளும் முடியும் கட்டத்தில் இருக்கும் நாம் சிந்திக்கவேண்டிய பல விடயங்கள் உண்டு. எம்முன் எழும் பல வினாக்களுக்கு பதிலளிக்கக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

நற்செய்தி அறிவிப்புப் பணி என்றால் என்ன? நோக்கம் என்ன? நற்செய்தி அறிவிப்புப் பணியை எவ்வாறு மேற்கொள்ள முடியும்? இன்று நடைமுறையில் இருக்கும் நற்செய்தி அறிவிப்புப் பணியின் வழிமுறைகள் அர்த்தமுள்ளவையா? நற்செய்தி அறிவிப்புப் பணியின் குறைபாடுகள் யாவை? நற்செய்தி அறிவிப்புப் பணி எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகள் எவை? போன்ற வினாக்கள் எம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

காலங்கள் மாறிவிட்டன. ''நற்செய்தியை அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ கேடு'' என நற்செய்தி அறிவிப்புப் பணியில் முன்னோடியாகத் திகழ்ந்த புனித சின்னப்பர் போன்ற நற்செய்தியாளர்களும் மறைந்து விட்டனர்.

சூழ்நிலைகளும் மாறிவிட்டன. ஆயினும் நற்செய்திப் பணி தொடர்கின்றது. தொடர வேண்டும். ஏனெனில் நற்செய்தி ஒன்றே தான். கிறிஸ்து இயேசுவில் நாம் ஒவ்வொரு வரும் அனுபவித்த இறைவனின் அன்பு வெளிப்பாட்டினை விளம்பரப்படுத்த கடமைப் பட்டுள்ளோம்.

''உலகின் இறுதி எல்லைவரை சென்று நற்செய்தியை அறிவியுங்கள்'' என யேசு கொடுத்த அன்புக் கட்டளையானது பாதகமான சூழ்நிலையாயிருப்பினும். சாதகமான சூழ்நிலையாயிருப்பினும் எந்நிலையிலும் நற்செய்தியை அறிவிக்க எம்மைத்தூண்டுகிறது. நற்செய்தி ஒன்றாக இருப்பினும், நற்செய்தி அறிவிப்பின் வழிமுறைகள் ஒவ்வொரு சூழ்நிலைக்கும், ஒவ்வொரு காலகட்டத்திற்கும், ஒவ்வொரு இடத்திற்கும், ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும், ஒவ்வொரு சமூக, பொருளாதார நிலைமைகளுக்கும் வேறுபட்டதாக அமைகின்றது. அமையவேண்டும். இதற்கு ஆதாரமாக புனித சின்னப்பரின் அனுபவம் அமைந்துள்ளது. அவரே கூறுகின்றார்,

> ''நான் யாருக்கும் அடிமையாய் இல்லாதிருந்தும் மிகுதியான மக்களை வசமாக்க என்னையே எல்லார்க்கும் அடிமையாக்கினேன்.
>
> ''யூதர்களை வசமாக்க, யூதருக்கு யூதனைப் போல் ஆனேன். யூதச் சட்டத்திற்குட்பட்டவர்களை வசமாக்க நான் அதற்கு உட்படாதவனாயிருந்தும், அச்சட்டத்திற்குட்பட்டவர்களுக்கு அவர்களைப்போல் ஆனேன். திருச்சட்டத்தை அறியாதவர்களை வசமாக்க அவர்களுக்குச் சட்டம் அறியாதவனைப்போல் ஆனேன். வலிமையற்றவர்களை வசமாக்க, வலிமையற்றவர்களுக்கு வலிமையற்றவன் ஆனேன். எப்படியேனும் ஒரு சிலரையாவது மீட்க எல்லார்க்கும் எல்லாம் ஆனேன். நற்செய்தியின் பலனில், பங்குபெற வேண்டி நற்செய்திக்காகவே இவையெல்லாம் செய்கிறேன்'' (1 கொரிந் 9/19-23)

எந்தவொரு முயற்சிக்கும், ஆக்கப்பணிக்கும் நோக்கமும், அதன் வழிமுறைகளும் தெளிவாக அமைதல் நல்லது. நற்செய்தி அறிவிப்புப் பணியினைப் பொறுத்தவரையில் அதன் நோக்கம் தெளிவில்லாமையும், வழிமுறைகள் சீர்கேடாகவும் அமைந்திருந்தன என்பது வரலாறு கூறும் உண்மை. கி. பி. 325 வரை நற்செய்திப் பணியின் நோக்கம் தெளிவாக இருந்தது. 325ல் அரசியல் ஆதிக்கம் தலைதூக்கியது. 7ம் நூற்றாண்டில் இஸ்லாம் மதத்தின் துரித வளர்ச்சி நற்செய்திப் பணியின் நோக்கத்தையே முற்றாக மாற்றியது. பிறமதத்தவர்கள் கடவுளற்றவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலித் தெய்வங்களை வழிபடுபவர்கள். இருளிலே வாழ்பவர்கள். மூழ்கிக் கொண்டிருக்கும் படகிலே இருப்பவர்கள். அவர்களுக்கு மீட்பு இல்லை. அவர்களை மீட்க வேண்டுமானால் திருச்சபை என்ற பாதுகாப்பான கோட்டைக்குள் அவர்களைக் கொண்டுவரவேண்டும். அவர்களை மதம் மாற்றித் திருச்சபையில் சேர்த்தால்தான் அவர்கள் மீட்பு அடைவர். எனவேதான் நற்செய்திப் பணியின் நோக்கம் அனைவரையும் மதம் மாற்றுவதாக அமைந்திருந்தது. இத்தகைய கருத்து புனித பிரான்சிஸ் சவேரியாரிடமும் இருந்தது. அவர் குறிப்பிடுகையில் ''காய்ந்த சருகுகள் போல கோடிக்கணக்கான ஆன்மாக்கள் தினமும் நரகத்தில் வீழ்ந்துகொண்டிருக்கின்றன'' என்கின்றார். அதாவது பிற மதத்தவர் அனைவரும் நகரத்திற்குச் செல்கின்றனர் என்பதே அவரது கருத்து. அதனால்தான் என்னவோ அவர் துரித வேகத்துடன் அவர்களை மீட்கும் ஆவலில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டார்.

போர்த்துக்கேயர் இந்தியாவில் உள்ள கோவாவில் இறங்கிய பொழுது முதன்முதலில் செய்த வேலை எல்லா இந்து ஆலயங்களையும் தகர்த்தெறிந்ததேயாகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையினுள் புதிய காற்று வீச கதவைத் திறந்துவிட்டது. நற்செய்தி அறிவிப்பின் நோக்கம் தெளிவுபடுத்தப்பட்டது. 'மறைபரப்பு' எனும் பெயர் 'நற்செய்தி அறிவிப்பு' என மாறியது. இவ்வுலகில் உள்ள எல்லா மனிதரும் பிறப்பினிலே தொடங்கி இறப்பினில் முடியும் வாழ்க்கை என்ற பொதுப் பயணத்திலே அன்பும், அமைதியும், அறமும் நிலவிடும் ஒரு புதிய சமுதாயத்தினை உருவாக்கும் இலட்சிய முடிவினை நோக்கிச் செல்கின்றனர். இறைவனின் பிரசன்னம், இறையனுபவம் திருச்சபையில் மட்டுமன்றி உலகின் பிறமக்களிடமும், பிற மதங்களிடமும், பிற சூழ்நிலைகளிலும் காணப்படுகின்றது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட இறையனுபவத்தை ஏனைய மக்களுடன் பகிர்ந்துகொள்வதன் மூலமும் அனைவரிடமிருந்தும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் மனித சமுதாயத்திற்குப் புத்துணர்ச்சியை ஊட்டுகின்றனர். நல்ல பாதை காட்டி, அப்பாதையில் மனித சமூகம் நடக்கத் தூண்டுகோலாகவும் இருக்கின்றனர். பல்வேறு மதங்கள் உள்ள கீழைத் தேசங்களில் நற்செய்திப் பணியை எவ்வாறு மேற்கொள்வது என்ற பெரிய பிரச்சினைக்கு 2ம் வத்திக்கான் சங்கம் காட்டும் வழிமுறை உரையாடலாகும்.

இந்த உரையாடல்,

எல்லா மதத்தவரோடும்
எல்லாக் கொள்கையினரோடும்
எல்லா இயக்கங்களோடும்
எல்லா மக்களோடும் நடைபெற வேண்டியதொன்றாகும். இவ்வித உரையாடல் மூலம் பகிர்தலும், பரிமாற்றமும் மதங்களினிடையே தொடர்ந்து நடைபெற்றால்தான் மனித சமுதாயம் தனது இலட்சியத்தை அடையமுடியும்.

நற்செய்தி அறிவிப்புப் பணியில் மற்றுமொரு தடைக்கல்லாக அமைவது இன்றைய உலகில் மனிதத் தன்மையை இழக்க வைக்கும் சக்திகளாகும். அகதிகள் முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் வாடுபவர்களுக்கு என்ன நற்செய்தியை அறிவிப்பது? அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு நலிந்து கிடக்கும் சமுதாயத்திற்கு என்ன நற்செய்தியை அறிவிப்பது? இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் எனப் பயந்து ஒளிந்திருக்கும் மக்களுக்கு என்ன நற்செய்யை அறிவிப்பது?

## பழக்கங்கள் இப்படி

ஒவ்வொரு நாட்டுத் தலைவர்களுக்கும் ஒவ்வொரு விதமான பழக்கம். பிரெஞ்ச் நாட்டு அதிபர் மிட்வாண்ட் சித்திரத் தொடர்கதைப் பிரியர். அமெரிக்க அதிபர் ரீகன் ''ஜெல்லி பீன்ஸ்'' என்ற மிட்டாய் சாப்பிடும் பழக்கம் உள்ளவர். காலஞ்சென்ற திருமதி. இந்திராகாந்தி குறுக்கெழுத்துப்போட்டி இரசிகை. ரஷ்யாவின் முன்னைநாள் அதிபர்களான ஆன்ட்ரபோவ் சாஸ்திரீய இசைத் தட்டுக்களை சேகரிக்கும் பழக்கமுடையவர், மற்றவரான பிரஸ்னேவ் புதிய வெளிநாட்டுக் கார்களை சேகரிக்கும் பழக்கமுடையவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு விடுதலைக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் மனித சமுதாயத்திற்கு மரியாளின் பாடல் நம்பிக்கைத் தொனியைக் கொடுக்கின்றது.

''வலியோரை அரியணையினின்று அகற்றினார்
தாழ்ந்தோரை உயர்த்தினார்.
பசித்தோரை நலன்களால் நிரப்பினார்...''

என்னும் அவள் பாடலில் முழு மனித சமுதாயத்தின் விடுதலை பற்றிய நம்பிக்கை வேரூன்றியுள்ளது. மரியாள் உரத்த குரலில் மேடையில் நின்று நற்செய்தியை முழங்கவில்லை. புனித சின்னப்பரைப் போன்று மறை பரப்புப் பயணங்களை மேற்கொள்ளவில்லை. மாறாக, தான் வாழ்ந்த சூழலில், தன் நம்பிக்கை நிறைந்த வாழ்வால் நற்செய்தியை அறிவித்து வாழ்ந்தாள் என்று கூறினால் மிகப் பொருந்தும்.

இறைவனே மனிதனுக்கு முழு விடுதலை யளிப்பவர் என நம்பினாள். ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என விசுவசித்தாள். இவ்விதம் நற்செய்தியை வாழ்ந்து காட்டினாள்.

நற்செய்தி அறிவிப்புப் பணி எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகளில் ஒன்று வழிமுறைகளில் காணப்படும் பெலவீனங்களாகும்.

— இன்று எம்மவரிடையே நற்செய்தியை அறிவிக்கும் ஆர்வம் - வேகம் குறைந்துள்ளது ஒரு பெரிய குறைபாடாகும்.

— முறையான திட்டமிடலும், தொடர்ச்சியான நடைமுறைப்படுத்தலும், தொலை நோக்கு ஆற்றலும் அருகிவிட்டது.

— நற்செய்திப் பணி மக்களின் மொழி கலாச்சாரத்தோடு தொடர்பற்றதொன்றாக, மக்களுக்கு அன்னியமாக இருப்பது மற்றுமொரு குறையாகும்.

— நற்செய்தியினை அறிவிப்பது என்பது வார்த்தைகளைக்கொண்டு வாய்மொழியாக அறிவிக்கும் செயலாக மட்டும் கருதப்படுகிறது. வெறும் கிளிமொழிப் பாடமாக அமைவதும், நாளுக்கு நாள் வளர்ந்து, மாறி, நிறைவுபெறும் மனிதத்தன்மைக்கு ஏற்றவாறு அமையாததும் குறைபாடாகும்.

— மறையாநில ரீதியான ஒழுங்கமைப்புக்கள், அவற்றின் செயற்பாடுகள் அபூர்வமாக உள்ளன.

— நற்செய்திப் பணியாளரிடையே காணப்படுகின்ற பிரிவினைகள். (உ-ம்: கத்தோலிக்கம், மெதடிஸ்ற், அங்கிலிக்கன்) கொள்கை வேறுபாடுகள், பிழை பிடிக்கும் மனப்பான்மை, மந்தைகளைக்கவரும், திருடும் போக்கு போன்றவை நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு பெரியதொரு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

— 2ம் வத்திக்கான் சங்கம் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சி 20 வருடங்களுக்கு மேலாகியும் பிற்போக்கு சக்திகளால் அமுல் நடத்த முடியாமலிருப்பது கவலைக்குரிய தொன்றாகும்.

— பசித்தவனுக்கு பணத்தை, பாணை, பால் மாவை கொடுப்பதும், வீடில்லாதவனுக்கு வீடு கட்டிக்கொடுப்பதும், தொழில் இல்லாதவனுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதும் நற்செய்தி அறிவிப்புப் பணியின் ஒரு அம்சம் என்று செயல்படும் சமூகநல அபிவிருத்தியாளர்களிடையே காணப்படும் ஊழல்களை மக்கள் இலகுவில் இனங்கண்டு கொள்வதும் நற்செய்தி அறிவிப்புப் பணியில் மாறாத கறையை ஏற்படுத்தி விடுகின்றது.

இக்குறைகளை நீக்கி அனைவரும் விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும், ஆர்வத்துடனும் நற்செய்தியை வாழ்ந்து காட்டினால் நிச்சயம் இயேசுக்கிறிஸ்துவின் வாக்கு நிறைவேறும்.

## நவீன துணையாசிரியர்கள்

WORD PROCESSOR என்று அழைக்கப்படும் ''எலக்ட்ராணிக்ஸ்'' துணை ஆசிரியர்கள் அமெரிக்க பத்திரிகைகளில் பெருமளவு உபயோகப்படுத்தப்படுகின்றன. கையெழுத்துப்பிரதியை எலக்ட்ராணிக்ஸ்முறைப்படுத்தி மாற்றங்களைச் செய்யும் இந்தக்கருவிகள் ஒரு கட்டுரை எப்படிஇருந்தால் மக்களிடையே வரவேற்பைப் பெறும் என்று யோசனையும் கூறுகின்றனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராமாயணம் பாடிய

**பெல்ஜியம்** தேசத்தவரான தந்தை கேமிலஸ் யேசு சபையின் பயிற்சித் துறவியாய் இருக்கும் பொழுது 1935ம் வருடவாக்கில் இந்தியாவுக்கு வந்தார். இந்திய மொழியைக் கற்பதில் தீவிர ஆர்வம் காட்டினார். விரைவிலேயே இந்தி மொழியில் மட்டுமல்ல சமஸ்கிருத மொழியிலும் சராசரி நிலையைக் காட்டிலும் ஒருபடி அதிகமாகவே புலமை பெற்றார்.

குருப்பட்டம் பெற்றபின்னர் அலகாபாத் பிரயாகைப் பல்கலைக் கழகத்தில் துளசிதாசரின் இராமாயணத்தை அதன் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றார். அருள் தந்தையின் ஆராய்ச்சிப்படி இராமன் ஏறக்குறைய கிறீஸ்துவுக்குப் பின்னரான முதல் நூற்றாண்டில்தான் அவதார புருஷன் என்ற அந்தஸ்து பெறுகிறான். அருட்தந்தை கேமிலசின் ஆராய்ச்சி இந்தி மொழி அறிஞர்களிடையே பெரும் பரபரப்பையும் வரவேற்பையும் ஏற்படுத்தியது.

இவர் இந்தியில் மொழிபெயர்த்த யேசுவின் சரிதம் ஏழை எளிய மக்களுக்குப் புரியும் வகையில் இலகுவான இந்தியில் அமைந்து பெரும் வரவேற்பைப் பெற்றது. அப் பகுதி இறை பணியாளர்கள் இம்மொழிபெயர்ப்பை ஒரு பொக்கிஷம்போல் போற்றிப் பாதுகாத்தனர்.

தந்தை கேமிலஸ் வடிவமைத்த இந்தி ஆங்கில அகராதி இன்றளவும் வட இந்திய மாநிலங்களில் பெரிதும் போற்றப்படுகிறது.

இவர் 1982 ஆகஸ்ட் திங்கள் 17ம் நாள் மரணமடைந்தார். புது டில்லியில் நடந்த அவரது இறுதி ஊர்வலத்தில் வட இந்திய மொழி அறிஞர்களும், இந்தி எழுத்தாளர்களும் பெரும் அளவில் கலந்து கொண்டனர். அப்போது இந்திய நாட்டின் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி விடுத்த இரங்கல் செய்தியில் —

" தந்தை கேமிலஸ் இராமாயணத்தில் ஆழமான அறிவு பெற்றிருந்தார். துளசிதாசரை நுட்பமான புலமையுடன் விளக்கியவர். அவரது மறைவு இந்திய இலக்கியத்துக்கும், இந்தி மொழிக்கும் பேரிழப்பாகும் என்று கூறினார். □

# இயேசு சபைக் குரு



**கேள்வி:-** FRIENDSHIP என்றால் என்ன?

**பதில்:-** அது ஒரு வகையான SHIP எனலாம். கடலின்றி SHIP இல்லாதது போல மற்றொரு உள்ளமின்றி FRIEND SHIP ஓடாது.

- **ஜோஸ்ரியின் பதில்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியப் புதிர் 5

பழைய ஏற்பாட்டிலே பல இறைவாக்கினர்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் வெவ்வேறு காலகட்டத்திலும் வெவ்வேறு சூழ்நிலைகளிலும் தோன்றி இறைவாக்குரைத்தனர். ஒவ்வொருவரையும் பற்றி கீழே சில அடைமொழிகள் தரப்பட்டுள்ளன. அவற்றின் துணைகொண்டு இறைவாக்கினர்களைக் கண்டுபிடியுங்கள்.

1. "நான் சிறு பிள்ளை. எனக்குப் பேசத்தெரியாது" எனக் கூறியவர்:

   ........................................

2. மூன்று பகலும் மூன்று இரவும் மீனின் வயிற்றில் இருந்தவர்?

   ........................................

3. உலர்ந்த எலும்புகள் உயிர்பெறக் காட்சி கண்டவர்?

   ........................................

4. "ஆண்டவரின் ஆவி எல்லார்மேலும் பொழியப்படும்" எனக் கூறியவர்?

   ........................................

5. வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இறைவாக்கினர்?

   ........................................

6. சமூக நீதியின் இறைவாக்கினர்?

   ........................................

7. "மொட்டைத் தலையா" என சிறுவர்களால் இகழப்பட்ட இறைவாக்கினர்?

   ........................................

3. சிங்கத்தின் குகையில் இடப்பட்ட இறைவாக்கினர்?

   ........................................

9. இறையன்பின் இறைவாக்கினர்?

   ........................................

10. ஆண்டவரின் ஊழியனைப்பற்றி முன்னுரைத்த இறைவாக்கினர்?

   ........................................

பெயர்: ........................................

முகவரி: ........................................

........................................

பரிசு: ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி: 30-10-88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியப் புதிர் - 3
## முடிவுகள்

1. ரூத்
2. சாறுள்
3. தெபோராா
4. இராக்காப்
5. மரியாம் (மிரியம்)
6. பெத்சாபே
7. அன்னு
8. மரியாள்
9. யூதித்
10. எஸ்தா்

## பரிசு பெறுவோர்:

1ம் பரிசு:

**A. மஞ்சுளா**
4/4, 3ம் குறுக்குத் தெரு,
மட்டக்களப்பு.

2ம் பரிசு:

**காமலிற்று டேவிற்**
புனித சிசிலியா பெண்கள் உ. த.
கல்லூரி,
மட்டக்களப்பு.

## பாராட்டுப் பெறுவோர்:

1. **நோயலின் டிலிமா**
புனித சூசையப்பர் ரோமன்
கத்தோலிக்க பெண்கள் விடுதி,
மட்டக்களப்பு.

2. **செல்வநாதன் வேலுப்பிள்ளை**
வீச்சுக்கல்முனை,
மட்டக்களப்பு.

3. **எஸ். பேரின்ப இராணி**
18/6, மத்தியாஸ் றோட்,
மட்டக்களப்பு.

4. **டிலானி தேவமனோகரன்**
கார்மேல் பாத்திமாக் கல்லூரி,
கல்முனை.

5. **அந்தனி சறோஜினி**
57/1, லேக் வீதி - 1,
மட்டக்களப்பு.


## வானொலிக் கலைஞர்கள் தேவை

எமது நிலையப் தயாரித்து வழங்கும் வானொலி நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள
நடிகர் - நடிகையர் தேவை.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய இறுதி நாள்

**20 - 10 - 88**

தொடர்பு: **வானொலிக் கலைஞர் தேர்வு**
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் 44,
மட்டக்களப்பு.


பங்குபற்றியோர் : 27
சரியான விடை அளித்தோர் : 9

அனைவருக்கும் எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பக்கம்

## சொல்லவேண்டிய...

தொண்டனே! நீ உங்களோடு கொஞ்சம்... என்று பகர முனையும்போது கூடுதலான அளவுக்கு கிறிஸ்தவ எண்ணக் கருக்களோடு சமகால நிகழ்வுகளையும் சேர்த்துக் கொள்ளுவதோடு தற்கால மக்களின் பிரச்சினைகளை மட்டும் வெளிக்கொணராது அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகளையும் தொட்டுக் காட்டிச்செல்ல வேண்டும்.

எஸ். அருள்நாதன்
மூதூர்.

## வாழ்த்தும்...

ஆவணித் தொண்டனில் மட்டக்களப்பில் நடைபெற்ற மறைக்கல்வி வினாவிடைப் போட்டி பற்றிய பொதுமக்கள் கருத்துக்கள் என்னும் அறிக்கை வரவேற்கத்தக்கது, அதில் தெரிவிக்கப்பட்டவைகள் உண்மையாயின் சம்பந்தப்பட்டவர்களுக்கு இது ஒரு படிப்பினையாகும். பகிர்ந்தளித்தவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம்.

யோ. மரியதாஸ்
மட்டக்களப்பு.

## ...வருத்தமும்

ஆவணித் திங்கள் தொண்டன் படித்தேன். பொதுமக்கள் கருத்து என்ற கட்டுரையைப் படித்தேன், படித்து முடித்ததும் இயேசு சிலுவையில் தொங்கும்போது கூறிய அன்பு மொழிகள்தான் என் உள்ளத்தில் வந்தது.

தந்தையே! அவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை.
லூக். 23/24.

A. S. ஞானப்பிரகாசம்
மட்டக்களப்பு.

## துணிவே துணை

'தூரப்பார்வை' மூலம் சமுதாயத்தில் மறைந்து கிடக்கும் உணர்வுகளை துணிவுடன் வெளிக்கொணர்ந்த கலையுலகனுக்கும் மக்களின் மனக்குமுறல்களை அப்படியே அப்பட்டமாகக் காட்டிய T. C. கனகரெட்ணத்திற்கும், குறளோவியத்தின் மூலம் உயிரூட்டிய எம். கணேசமூர்த்திக்கும் என் மனப்பூர்வமான நன்றிகள்.

எஸ். ஏ. நாதன்
வெள்ளவத்தை.

## வாழ்த்து

புதிய ஆசிரியரின் போக்கில் புதியமணம் பரவுகிறது. உங்களோடு கொஞ்சம் உருக்குகிறது நெஞ்சத்தை. தொடரட்டும் நும் தொண்டு படரட்டும் பாரெங்கும்!

கே. எம். கிறிஸ்டி
மூதூர்.

## போதாது!

ஆவணி இதழ் மகிழ்ச்சியைத் தந்தது. தொண்டன், மாதம் ஒருமுறை மலரும் மலராக இருப்பதால் கொள்ளளவு குறைவாக இருப்பதாகத் தோன்றுகிறது. ஆவன செய்வீர்களா?

இ. ரூஜ்
சொறிக்கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

எமது வெளியீடு !

## நாவண்ணனின்

# பயணம் தொடர்கின்றது

-: முழு நாவல் :-

- தொண்டன் சஞ்சிகையில் 20 மாதங்களாகத் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்ற இந் நூல் முழு நூலாக உங்கள் கைகளில் தவழ வருகின்றது.

- 'தொண்டன்' வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வெளிவரும் முதல் நாவல் இது. குறிப்பிட்ட பிரதிகளே அச்சாக இருப்பதால் ரூபா 25/- செலுத்தி உங்கள் பெயர்களை உடனே பதிவு செய்யுங்கள்.

- தொண்டன் இதழில் பிரசுரமாகும் தொடர் கதைகள், சிறு கதைகள், கவிதைகள் தொண்டன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து நூலுருவில் வரும் என்பதை வாசக நேயர்களுக்கு அறியத்தருகிறேம்.

- எமது எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது ஆக்கங்களை நூலுருவாக்கவும், தமிழ் இலக்கியச் சோலையை மேலும் வளப்படுத்தவும் நாம் தொடங்கவுள்ள வெளியீட்டுப் பணிக்கு வாசகர்களின் முழுமையான ஆதரவை எதிர்பார்க்கின்றேம்.

தொடர்பு :- ஆசிரியர்,
தொண்டன்,
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

இச் சஞ்சிகை மட்டக்களப்பு "ஜெஸ்கொம்" (Jescom) அச்சகத்தில் அச்சிட்டு, தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 1988-9-28ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org